


# தர்மசாஸ்திரம் எது?


**எழுத்தாளர்:** மூன்று மதத்திற்கும் ஒருவரே குரு,
ஆன்மீக சாம்ராஜ்ஜிய சக்கரவர்த்தி, நூறு கிரந்தங்கள் எழுதியவர்,
இந்து ஞான தர்ம பிரதாதா, குறிப்பிடத்தக்க எழுத்தாளர்,
த்ரைத்த சித்தாந்த ஆதிகர்த்தா

## ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஆச்சார்ய பிரபோதானந்த யோகீஸ்வரர்



**தமிழாக்கம்**
எஸ். பிரகாஷ்



**பதிப்பாளர்**
**இந்து ஞான மேடை**
(Estd. in 1978 – Regd. No.: 168/2004)

த்ரைத்த வருடம் - 40 முதல் பதிப்பு: ஆகஸ்ட் - 2021
பதிப்பு: 1000 விலை: /-

**எஸ். பிரகாஷ்,**
குப்பம், ஆந்திர பிரதேஷ்.
(கைபேசி: +91-9441915291)

**ப. ர. சந்திரமோகன்,**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9840381879)

**கே.செந்தில்குமரன்**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9841355578)

# தர்மசாஸ்திரம் எது?



ஜெகத்தில் ஆலோசனை சக்தி ஞானம் இல்லாத எந்த ஜீவராசிக்கும் தர்ம சாஸ்திரத்துடன் வேலையில்லை. அனைத்து விஸ்வத்தில் விவரம் அறிந்தவன் மனிதன் ஒருவன் தான். அதனால் மனிதனாகிய ஒவ்வொருவருக்கும் தர்மசாஸ்திரம் என்றால் என்ன என்பதை அறிய வேண்டும். தர்மசாஸ்திரம் மனிதனுக்கு ஆகாரம் கொடுக்குமா, ஆதாயம் கொடுக்குமா? எந்தவிதமான ஆதாயமும் இல்லாத ஒன்றை பற்றி மனிதனுக்கு எதற்குத் தேவை என்று சிலர் கேட்பார்கள். அதற்குப் பதில் பார்த்தால் தர்மசாஸ்திரத்தால் ஒரு வேளை ஆகாரமோ, ஒரு ரூபாய் ஆதாயமோ இருக்காது. அப்படி ஒரு வேளைக்கான ஆகாரத்திற்கு உதவாத தர்மங்களுடன் நமக்கு என்ன வேலை என்று யாரும் நினைக்கக்கூடாது. எதற்காக என்றால்! தர்மம் மனிதனுக்கு ஆதாயமும் ஆகாரமும் கொடுக்காது, அது நேராக மனிதனுக்கு சம்மந்தப்பட்டுள்ளது. தர்மம் என்பது மனிதன் வாழ்வில் ஒரு பாகமாய் உள்ளது. ஆனால் அந்த விஷயம் எல்லோருக்கும் தெரியாது. ஒரு மனிதன் தர்மத்தை தெரிந்து வாழ்ந்தால் அது சரியான வாழ்க்கை ஆகும். அப்படி இல்லாமல் தர்மம் என்றால் என்ன என்பதை தெரியாமல், எந்த அளவுக்கும் தர்மம் இல்லாத வாழ்க்கை வாழ்ந்தால் அது குறைபாடு உள்ள வாழ்க்கை ஆகும். அவருடையது சரியான வாழ்க்கை இல்லை என்றும் சொல்லலாம். மனிதன் வாழ்க்கையில் தர்மம் என்பது வாகனத்திற்குள்ள லைட் ஒளி போன்றதாகும். இருட்டு பயணம் செய்யும்போது வாகனத்திற்கு (காருக்கு) லைட் ஒளி

எவ்வளவு தேவையோ தர்மங்கள் கூட மனிதனுக்கு அவ்வளவு தேவை. வாகனத்திற்கு உள்ள லைட் ஒளி வாகனத்தை ஓட்டாது, நடத்துவதற்கு சக்தியை கொடுக்காது. வாகனம் லைட் ஒளி இல்லாமல் போகும். வாகனம் எவ்வளவு விலையுயர்ந்த வாகனமாக இருந்தாலும் இருட்டில் வழி தெரியாததால் சரியான பாதையில் நடக்காமல் வழி தவறி நடக்கும். அப்படி நடக்கும்போது பயணம் இந்தப்பக்கம், அந்தப்பக்கம் அசைந்து குண்டும், குழியான மேடு பள்ளம் பாதையில் நடக்கவேண்டியதிருக்கும். எங்கேயாவது பெரிய குழி அல்லது, பெரிய கல் எதிர்பட்டால் விபத்து நடந்து பயணம் நின்றுபோகும். அதே விதமாய் மனிதன் பெரிய பணக்காரனாக இருந்தாலும் வாழ்க்கையில் பார்ப்பதற்கு நன்றாக நடந்துக்கொண்டிருக்கும். ஆனால் தர்மம் இல்லாத மனிதனில் அமைதியிருக்காது. அவர் வாழ்க்கையில் சந்தோசம் இல்லாமல், கவலை கூடிய வாழ்க்கையாக நடந்துக்கொண்டிருக்கும். எப்போதாவது வாழ்க்கையில் பெரிய சம்பவம் நடந்தால் தர்மம் தெரியாத மனிதன் அந்த வேதனையை தாங்க மாட்டான். இந்த வாழ்க்கை வாழ்வதைவிட மரணம் அடைவதே நல்லது என்று நினைப்பான். எப்போதாவது வழி இல்லாமல் வாகனம் வழியில் நின்றதுபோல், தர்மம் இல்லாத மனிதன் எப்போதாவது ஒரு நாள் வாழ்க்கை இலக்கை அடையாமல், வழி தெரியாமல், ஒன்றும் செய்யாமல் வாழ்க்கையை நடத்துவார்கள். இன்று பலபேர் தர்மங்கள் தெரியாத நிலையில் வாழ்ந்து, எனக்கு எல்லாம் நன்றாக இருக்கிறது என்று நினைக்கிறார்கள். பகலில் லைட் ஒளி வாகனத்திற்கு

இல்லாமல் பயணிக்கும் வாகனத்திற்கு, இரவு நேரத்தில் லைட் ஒளி வாகனத்திற்கு எவ்வளவு அவசியம் என்று நினைக்க மாட்டார்கள். பகலில் லைட் ஒளி தன்னில் ஒரு பாகமாக வாகனத்திற்கு இருப்பதுப்போல், மனிதனுக்குக் கூட தர்மம் தன் வாழ்க்கையில் ஒரு பாகம் என்று தெரியாத நிலையில் பல பேர் வாழ்கிறார்கள். வாழ்க்கையில் வழி காட்டியது லைட் ஒளி போன்றது தர்மம். தர்மம் என்னவோ தெரியாமல் தர்மம் என்றால் அர்த்தம் என்ன? அந்த சூழ்நிலையில் இன்று மனிதர்கள் இருக்கிறார்கள். சிலர் இது என்ன புதிய வார்த்தையாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். தர்மம் என்றால் அர்த்தம் ஏதாவது இருக்கலாம், அது இல்லாமல் போனால் மனிதன் மனிதனாகவே இருக்க முடியாது என்னும் தெரிந்த கடவுள் மனிதனுக்கு பிறப்பை தெரிவித்து பாவத்திற்கு, அவரே தன் தர்மங்களை மனிதனுக்கு தெரியப்படுத்த வேண்டியது இருக்கும். கடவுள் அப்படி சிரமப்பட்டு நம்மிடம் வந்து தர்மம் இது தான் என்று சொல்லினால், எங்களுக்கு பணம் தான் முக்கியம் என்று கூறி, தர்மம் எங்களுக்கு தேவையில்லை போ என்று சொல்கிறார்கள். பணம் இல்லாமல் வாழ முடியாது, தர்மம் இல்லாமல் வாழ முடியாதா என்று மீண்டும் கேள்வி கேட்கின்றார்கள். வெறி நாய் சதையில்லாத எலும்பை கடித்து ஆஹா! எவ்வளவு ருசியாக இருக்கிறது என்னும் நினைத்ததுப்போல், கர்மமுள்ள மனிதன் தர்மம் இல்லாத வாழ்க்கை கடத்திக்கொண்டு ஆஹா! வாழ்க்கை நன்றாக இருக்கிறது என்று நினைக்கிறான். நாய் கடித்திருந்த எலும்பு அந்த அளவுக்கு ருசி இல்லை என்று தெரியாமல்,

மனிதன் தான் கடந்து இருந்த வாழ்க்கை எந்த அளவுக்கும் ருசி இல்லாமல், உபயோகம் இல்லாமல் இருக்கிறான். சதை இல்லாத எலும்பைக் கடித்த நாய், எலும்பு குத்தி தன் வாயில் காயமாகி ரத்தம் வந்தபோது, தன் ரத்தத்தை ருசி பார்த்தது அது எல்லாம் எலும்புக்குள் உள்ளருசி என்னும் நினைத்து, சதையுள்ள எலும்பை தின்கின்ற நாயை பார்த்து, தன்னுடைய எலும்பை அது பிடுங்கிடுமோ என்று பக்கத்துக்கு போய் திரும்பியது, தர்மம் இல்லாத வாழ்க்கை கடந்தவர்கள் தர்மம் இருப்பவன், தர்மம் தெரிந்தவன் எதிரே வந்தால் அவன் என்னை கெடுத்து விடுவான் என்று தப்பித்துத் கொள்வார். இதற்கு எல்லாவற்றுக்கும் காரணம் தர்மம் என்றால் என்ன, தர்மம் என்றால் மதிப்பு தெரிய வில்லை என்று அர்த்தமாகின்றது. இதையல்லாம் கவனித்த பிறகு மனிதன் தர்மத்திற்கு தூரமாக வாழ்கிறான் என்று தெரிகிறது. மனிதன் ஏழையில் இருந்து, பணக்காரன் வரை, பண்டிதர்களில் இருந்து ஒன்றும் தெரியாதவர் வரை, வேலையில்லாதவரில் இருந்து மஹரிஷி வரை, அஞ்ஞானிகளில் இருந்து சுவாமிஜி வரை எல்லாம் வகையான மனிதர்கள் பூமி மேல் வசிக்கிறார்கள். பூமி மேல் எல்லாம் வகையான மனிதர்கள் தர்மம் தெரிந்தவர்கள் எத்தனை பேர் வசிக்கிறார்கள் என்று பார்த்தால், சாதாரண மனிதர்கள் எங்களுக்கு தர்மம் என்றால் தெரியாது என்னும் ஒப்புக்கொண்டால், பண்டிதர்கள், சுவாமிஜிகள் எங்களுக்கு தர்மம் தெரியும் என்னும், தர்மம் பிரகாரம் நடந்துக் கொள்கிறோம் என்றும் சொல்கிறார்கள். அவர் சொல்லும் வார்த்தை உண்மை என்று நாம் ஒப்புக்கொண்டாலும் கடவுள்

மட்டும் ஒப்புக்கொள்ள மாட்டார். எதற்கு என்றால்! நம் கணக்கில் சொல்லப்படும் தர்மம் வேறு. கடவுள் கணக்கில் சொல்லப்படும் தர்மம் வேறு. அவருக்கு தெரிந்ததே தர்மம் என்னும் நினைப்பதினால், நாங்கள் தர்மம் தெரிந்தவர்கள் என்று நம்பிக்கையில் இருகிறார்கள். மனிதர்கள் யாருக்கு தோன்றியது அவருக்கு தெரிந்ததை தர்மம் என்று நினைப்பதால் மனிதன் கணக்கில் தர்மம் சாஸ்திரப்பிரகாரம் இல்லாமல் போய் நினைக்க முடியாத அளவில் மறைந்துபோனது. சிலர் கற்பனைகளில் மனிதர்கள் நேர்மையாக நடந்துக்கொள்வது தர்மமாக நினைத்துக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் தானத்தை தர்மம் என்று நினைக்கிறார்கள். சிலர் எக்னம் செய்வது, தர்மமாக நடந்து கொள்வது தான் என்று நினைப்பதாக தெரிகிறது. சிலர் நியாயமாக நடப்பது தர்மம் என்று நினைக்கிறார்கள். திருடர்கள் கொள்ளை அடிப்பது தான் தர்மம் என்று நினைக்கிறார்கள். வியாபாரி மனிதர்கள் அவசரம் பொருத்து லாபம் சம்பாதிப்பது தவறு இல்லை, இது வியாபாரத்தில் உள்ள தர்மம் என்று சொல்கிறார்கள். க்ஷத்திரியர்கள் போர் செய்தால் தவறு இல்லை, போரில் எதிரியைக் கொன்றால் தவறு இல்லை. இது க்ஷத்திரியர்கள் ஸ்வதர்மம் என்று சொல்கிறார்கள். இப்படி கடைசியில் மனிதன் தனக்கு பொருத்தமானது எல்லாம் ஸ்வதர்மம் என்னும், பொருத்தமில்லாதது எல்லாம் பரதர்மம் என்று சொல்கிறார்கள். இந்த பல வகையானதில் எது சரியான தர்மம் என்று தெரியாமல் போனது. வருங்காலத்தில் தர்மத்தை பற்றி பிரச்சனை நடக்கும் என்று தெரிந்த கடவுள், சிருஷ்டி

ஆதியில் தர்மத்தை தெரியப்படுத்தினார். ஆனால் கடவுள் தெரிவித்த தர்மங்கள் இந்த நாள் கூட கிரந்தங்கள் மூலம் நமது முன்பு இருந்தாலும், அந்த கிரந்தங்கள் மனிதன் ஆர்வமாக பார்பதில்லை. ஒரு வேளை யாரவது கடவுள் கிரந்தங்கள் பார்த்தால், அதில் சொல்லிய தர்மத்தை மனிதனுக்கு ஆர்வம் இல்லாததால் அர்த்தம் தெரிந்துக் கொள்ளாமல் போகின்றான். சாதாரண மனிதர்களுக்கு அர்த்தம் புரியவில்லை என்றால் ஆச்சர்யப்பட வேண்டியது இல்லை, நாங்கள் ஆத்மஞானம் தெரிந்தவர்கள் என்றும், நாங்கள் கடவுள் ஞானம் சொல்லி போதிப்பவர் என்றும் கூட, பெரிய சாமிஜிகள் பெயர் உள்ள அவரும் கூட கடவுள் சொல்லிய தர்மத்தை விட்டு, தர்மங்களாக அதர்மங்களை தர்மமாக போதிப்பது முழுமையாக ஆச்சர்யமாக உள்ளது. புகழ் பெற்று போதிப்பவரும் தெய்வ கிரந்தங்களில் கூட மனிதன் எழுத்து சேர்ந்ததினால் கடவுள் தர்மம் மறைவானது அதர்மங்கள் சேர்ந்ததை தர்மங்களாக சொல்லப்படுகிறது. கடவுள் சொல்லிய தர்மசாஸ்திரத்தை விட்டு, மனிதன் சொல்லினால், மனிதன் பெயரில் உள்ள தர்மங்களை சொல்லப்படுகிறது. தர்மசாஸ்திரம் முதல் முறையாக கடவுள் பூமி மேல் வரும் படி செய்தார். கடவுளுக்குத் தவிர தர்மசாஸ்திரம் யாருக்கும் தெரியாது. மேலும் கடவுள் முதலில் தர்மசாஸ்திரம் சொல்லினார். எப்போதாவது கடவுள் சொல்லியது தர்மசாஸ்திரம் ஆகும். தவிர மனிதர்கள் சொல்லும் தர்மசாஸ்திரம் தவறானது ஆகும். கடவுள் சொல்லிய தர்மம் மனிதன் சொல்லலாம், மனிதன் சொந்தமாக தர்மத்தை பற்றி சொல்ல முடியாது. இன்னொரு விஷயம்

என்னவென்றால் கடவுள் சொல்லிய தர்மங்கள் முழுமையாக இருக்கும். அதே தர்மத்தை மனிதன் தெரிந்து அறிந்து போதனையாக சொல்லினால் அவை முழுமையற்றதாக இருக்கும். புத்தி உடையவர் அந்த வித்தியாசம் கண்டுபிடிக்கலாம். கடவுளால் சொல்லப்பட்ட தர்மம் பிரகாசமாக இருக்கும். அதை திரும்ப மனிதன் சொல்லினால் அது பிரகாசமாக தெரியாமல் பலவீனமாக தெரியும். அந்த வித்தியாசத்தை எல்லோரும் கணிக்கமாட்டார்கள். நடந்துப் போன சரித்திரத்தில் சிலர் தூதர் பெயர் பக்கத்தில் தர்மசாஸ்திரம் என்று எழுதப்பட்டு உள்ளது. அதனை பொருத்து அவை தூதர் தான் இந்த தர்ம சாஸ்திரத்தை எழுதியது என்று தெரிகிறது. மனிதர்கள் எழுதிய தர்மசாஸ்திரத்தை நம்பாமல்போனாலும், தூதர் எழுதிய தர்மசாஸ்திரத்தை நம்பலாம் அல்லவா என்று சிலர் கேட்பார்கள்! கடவுள் சொல்லிய தர்மங்களை மனிதன் போதனையில் சொல்லினால், அது சரியாக இல்லாமல் போன காரணத்தினால், கடவுள் சொல்லிய சொல் மனிதனுக்கு அர்த்தம் புரியவில்லை என்று கூறலாம். ஒருவேளை உள்ளது உள்ளபடி சொல்கிறோம் என்று நினைத்தால், மனிதனுக்கு தெரியாமல் கடவுள் தர்மங்கள் சிறுது மாற்றம் செய்து அவற்றின் மதிப்பு அவற்றுக்கு இல்லாமல் போகும். இந்த விஷயம் அர்த்தம் ஆவதற்கு ஒரு உதாரணத்தை கூறுகிறேன் பாருங்கள். ஒரு குரு கடவுள் ஞானத்தை போதித்து கடவுள் சேவை செய்வார். அவர் ஞானம் போதிப்பது கடவுள் சேவை என்ற எண்ணத்துடன் தர்மம் முறையாக சேவை செய்கிறார். அவர் நோக்கத்தில்

போதிப்பதே சேவை ஆனதினால், வேறொறுவரிடம் இருந்து எந்த லாபமும் ஆசைப்படாமல் கடவுள் ஞானத்தை போதிப்பவர் ஆவார். கடவுள் ஞானம் கௌரவத்திற்கு தடங்கல் ஏற்படாமல் இருப்பதற்கு, கடவுள் ஞானத்திற்கு கௌரவம் கோர்த்ததாக, புதுசு புதுசாக, தெளிவான ஞானத்தை பாத்திர பாத்திரமாக தானம் பிரகாரம் வேறொருவருக்கு ஞான தானம் செய்து கொண்டிருந்தார். ஞானத்திற்கு கௌரவம் உள்ளதாக தன் இடத்திற்கு வந்தவர்க்கு மட்டுமே ஞான தானம் செய்து வந்தார். ஞானத்தை தெரிந்து கொள்ளலாம் என்பவருக்கு ஆர்வம் இருகின்றவர்களுக்கு மட்டும் ஞானம் சொல்வார். ஞானம் உள்ள இடத்திற்கு அதனை தெரிந்து கொள்லாம் என்பவர் வர வேண்டும் தவிற, ஞானம் அவரிடத்திற்கு போகக்கூடாது, அவர் எங்கும் போகாமல் தன்னிடத்திற்கு வந்தவர்களுக்கு மட்டும் அவர் சொல்லும் நாள், மணி குறிக்கப்பட்ட நேரத்தில் மட்டும் ஞானத்தை சொல்லுவார். அதாவது குருவே சிஷ்யன் வீட்டிற்கு போய் ஞானம் சொல்வது நல்லது அல்ல, அப்படி சொல்வதால் ஞானத்தை அகௌரவப்படுத்துவது ஆகும் என்று சொல்வார். ஒருவேலை செய்தால் அது சேவை ஆகலாம், அல்லது கூலியாகலாம். அதன் பிரகாரம் அவர் சொல்லும் ஞான போதனை என்னும் காரியத்திற்கு கூலி கொடுப்பதாக இருக்கக்கூடாது. ஆதாயம் இல்லாமல் சேவையாக இருக்க வேண்டும் என்றும் நினைத்து தான் சொல்லிய போதனைக்கு பலன் வேறுவரிடம் எதுவும் எதிர்பார்க்கமாட்டார். வேறு ஓருவர் தனக்குத்தானே ஏதாவது கொடுக்கனும் என்றால் அது கடவுளுக்கு உபயோகப்பட வேண்டும் என்று கூறுவார்.

“நீங்கள் எங்களுக்கு ஞானம் சொல்லியதற்கு உங்களுக்கு பணம் கொடுக்கலாம் என்னும் கேட்டால், அதற்கு பதிலாக நீங்கள் கொடுக்கும் ஒரு ரூபாய் கூட கடவுள் ஞானம் பிரச்சாரம் செய்வதற்கு தான் தெரிந்தோ, அல்லது தெரியாமலோ கூட கடவுள் பிரச்சாரத்திற்கு உபயோகப்பட வேண்டும். அப்படி கடவுளுக்கு ஆகாமல் மனிதனாகிய எனக்கு உபயோகபடக்கூடாது” என்று சொல்வார். அவர் யாரிடமும் பணம் கேட்கவில்லை. யாராவது கொடுத்தால் அது கடவுள் ஞான பிரச்சாரத்திற்கு உபயோகிக்க பயன்பட வேண்டும் என்று செய்து வருவார். இன்னும் முக்கியமாக சேவை விஷயத்தில் என்ன சொல்வார் என்றால், நூறு ரூபாய் செலவு செய்து கடவுளுக்கு பூஜை செய்வது விட ஒரு ரூபாய் செலவு செய்து கடவுள் ஞானத்தை பிரச்சாரம் செய்யுங்கள் என்று சொல்வார். “அதாவது கடவுளுக்கு பூஜை செய்வது இஷ்டம் இல்லை என்னும், தன் ஞானம் பிரச்சாரம் செய்வது அவருக்கு இஷ்டம் என்னும், அதனால் கடவுள் ஞானத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ பிரச்சாரம் செய்வதில் கலந்து கொள்ள வேண்டும்” என்று சொல்வார். கடவுள் ஞானம் பிரச்சாரம் செய்வது விட இதற்கு மேல் தெய்வ ஆராதனை இல்லை என்னும் சொல்லி, அது மனிதன் அனுசரிக்க வேண்டிய முக்கியமான தர்மம் என்னும் சொல்லி, அவர் ஞானம் போதிப்பது முக்கியமான தர்மம் என்னும் நினைத்து, இரவு நேரத்தில் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் வரை இடைவெளி அதிக நேரம் எடுத்துக்கொள்ளாமல், அதிக காலம் ஞான ரசனை செய்து சிறிது கிரந்த ரூபத்தில், சிறிது போதனை ரூபத்தில் தெய்வ

சேவை செய்து வருகிறார். யாராவது தன்னை கேட்காமல் நாங்கள் கூட சேவை செய்யலாம் என்னும், எப்போதாவது யாராவது பணம் கொடுக்கலாம் என்று நினைத்தால் அதை கடவுள் உண்டியில் (இங்குவுள்ளது) போட வைத்து, பிறகு கடவுள் ஞான பிரச்சார சேவைக்கு உபயோகித்துக் கொள்வார். தனக்கு கடவுள் காரியத்திற்கு செய்யும் போது பணம் குறைவானால் வேறு ஒரு வரிடம் கடன் வாங்கி அதற்கு தகுந்த வட்டி செலுத்துவார். இந்த விதமாக எவ்வளவு பொறுப்பாக மனிதன் தெய்வ மார்கத்தில் அனுசரிக்க வேண்டிய முக்கிய தர்மம் தெய்வ ஞானத்தை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தலாம் என்னும் நினைத்து, அதே வேலையாக தர்மத்திற்கு எதிராக இருக்காமல் செய்து வந்தார். தனக்கு தெரிந்த கடவுள் ஞானத்தை போதிப்பது மனிதனுக்கு முக்கிய தர்மம் என்னும் சொல்லியதினால், அவரிடம் ஞானம் தெரிந்தவர்கள் இரண்டு பேர் தன் குருவிடம் தெரிந்த ஞானத்தை வேறு ஒருவருக்கு சொல்லி கடவுள் சேவை செய்யலாம் என்று நினைத்தார்கள். அதே விஷயத்தை தன் குருவிடம் கேட்டு குரு அனுமதி பெறலாம் என்று நினைத்தார்கள். அவர் வார்தை கேட்ட குரு சந்தோஷப் பட்டு ஒரு பக்தனாக யாராவது கடவுள் சேவை செய்யலாம் என்னும் நினைத்தால், தெய்வ ஞானம் போதனை செய்வது விட அதற்கு மேல் வேறு எந்த சேவையும் இல்லை என்னும் அவருக்கு சொல்லி, அவருக்கு அந்த வேலை கண்டிப்பாக செய்யுங்கள் என்று உற்சாகப்படுத்தினார். தன் குரு கூட அனுமதி கொடுத்ததால் அவர் அன்றிலிருந்து தெய்வ ஞானத்தை போதிக்க ஆரம்பித்தார். அப்படி

அவருக்கு தெரிந்த ஞானத்தை போதிக்க ஆரம்பித்தார்கள். தன் குரு பேச்சு வார்த்தையில் சொல்லிய ஞானத்தை, பேச்சு வார்த்தைகளில் பாட்டுகளில் கவிதைகளில் சொல்ல ஆரம்பித்தார்கள். அப்போது குரு வெறும் பேச்சு வார்த்தைகளில் சொல்லிய ஞானத்தை விட பாட்டு, கவிதை சொல்லிய ஞானம் கேட்பதற்கு நன்றாக தெரிந்தது. அப்படி நன்றாக தெரிவதினால் கேட்பவர் குருவை விட சிஷ்யர்கள் நன்றாக சொல்வர் என்று அவரை புகழ ஆரம்பித்தார்கள். அதற்கு இரண்டு சிஷ்யர்கள் தனக்கு தானே புகழ ஆரம்பித்தார்கள். கேட்பவர் குரு சொல்லிய ஞானம் தான்! இவர் சொல்லியது என்று நினைக்காமல் இவரே சொந்தமாக சொல்லிப் புகழ்ந்து, இரண்டு சிஷ்யர்கள் கூட இது எல்லாம் குரு கொடுத்த ஞானம் என்று நினைக்காமல், பக்கத்தில் இருந்தவர் புகழும்போது தன்னை பெரியதாக எண்ணிக் கொண்டார்கள். முதலில் ஆரம்பித்தபோது தெய்வ ஞானம் போதிப்பது தர்மமே ஆனால், அது குரு அவர்களிடம் மட்டும் தர்மமாக இருந்து, இரண்டு சிஷ்யர்களிடம் மட்டும் தர்மம் சிறிது அதர்மமாக மாற துவங்கியது. ஆனால் ஞானம் போதிப்பது கடவுள் சேவை தர்மமாக இரண்டு சிஷ்யர்கள் நினைத்திருந்தாலும், அவர்களுக்கு தெரியாமல் தர்மம் சிறிது சிறிதாக மாற்றம் ஏற்பட்டு வந்தது. குரு தெய்வ ஞானத்திற்கு மதிப்பு கொடுத்து அவரிடம் வருபவருக்கு மட்டும் ஞானத்தை சொல்வார். ஆனால் சிஷ்யர்கள் அவரிடத்திற்கு போய் சொல்வார்கள். போதனை செய்வது சேவை தர்மம் தான் கேட்பவருக்கு குறைவானவராக மாற ஆரம்பித்தது. வந்து போக செலவுக்கு பணம் கொடுத்து புதிய வஸ்த்திரம்,

தக்ஷனம் கொடுத்தால் அவரே வந்து சொல்லிப்போவார் என்னும் எண்ணமுடன் கேட்கிறவர் வந்து, எப்போது அவசியமோ அப்போது ஞானம் சொல்லுங்கள் என்று கும்பிடுவார்கள். அப்போது இவர் ஞானம் சொல்லுவது முக்கிய சேவை தர்மம் அல்லவா! அவர் இடத்திற்கு போய் சொல்வார்கள். ஆனால் அவர் கொடுக்கும் தட்சணை பணம், புதிய வஸ்திரங்கள், செலவுக்குப் பணம் கொடுப்பார்கள் இவை எல்லாம் நமக்குவுள்ள கௌரவத்திற்கு கொடுத்தார்கள் என்று நினைத்தார்கள். அதாவது இந்த விஷயம் குருவிற்கு தெரியாது. இரண்டு சிஷ்யர்கள் கூட தனக்கு கொடுத்த கௌரவம் மரியாதையும், பணம் விஷயம் குருவிற்கு தெரியாமல் மறைத்தார்கள். ஒரு வேளை குருவிற்கு தெரிந்தால் ஞானத்திற்கு கௌரவம் இல்லாமல் போகும் என்னும், ஞானத்திற்கு கௌரவம் குறைந்து போகும் என்னும் சொல்வார் என்று மறைத்தார்கள். இந்த விதமான நண்டு ருசி தெரிந்த நரி வயல் வழியில் தேடிப்போகும்போது, லாபம் ருசிப்பார்த்த சிஷ்யர்கள் யார் அழைத்தாலும் அவரிடத்திற்குப் போய் ஞானம் சொல்வதற்கு தயார் ஆனார்கள். சிறிது காலத்திற்கு பிறகு மேலுள்ள கிரகங்களில் ஒன்று மட்டும் இவர் பிரவர்த்தனை மீது கண் வைத்தது. குரு எவ்வளவோ பெரியதான ஞானத்தை கௌரவமாக சொல்லும்போது, அவர் சிஷ்யர் ஞானத்தை ஊர் ஊருக்குப் போய் ஞானத்தை விற்பது நல்லது அல்ல, அவருக்கு தகுந்த புத்தி சொல்லலாம் என்று கிரகம் சமயத்திற்காக காத்திருந்தது. அப்படி இருந்த ஒரு சிஷ்யன் அஞ்ஞானத்தை சிறிது வாய் தவறி பேசினார். வெளியே உள்ள மனிதர்களிடம் குரு

அவருக்கு மேல் சிஷ்யர்கள் ஆகிய எங்களுக்கே கௌரவம் அதிகமாக உள்ளது. நாங்கள் பல ஊருக்குப்போய் இருந்தால் குரு அவர்களுக்கு மேல் எங்களுக்கே மரியாதை கொடுத்தார், நல்ல கௌரவமாக வஸ்திரங்கள் கொடுத்தார்கள். அவருக்கு வராத லாபமும், அவருக்கு வராத கௌரவமும் எங்களுக்கு இருக்கிறது என்னும் வேறு ஒருவரிடம் குருவை விட அவர்களை பெரியதாக சொல்லினார்கள். அப்போது முதலில் இருந்து அவரை கவனித்து இருந்த கிரகம், கடவுள் சேவை தர்மங்களை அதர்மமாக மாற்றினவர் மீது கோபமாக, அந்த விதமாக பேசிய சிஷ்யனை மொத்தமாக கொன்றுவிட்டது. இதைப்பார்த்த இரண்டாவது சிஷ்யன் நல்ல புத்தியோடு இருப்பான் என்று கிரகம் விட்டுவிட்டது. சிறிது காலத்திற்குப் பிறகு குரு இடத்திற்கு வந்து ஞானம் தெரிந்து கொண்ட மற்ற சிஷ்யர்கள் கூட அவர் அவர்கள் ஊரிலேயே இருந்து, தன் இடத்திற்கே வந்து சொல்லும் தன் கூட இருந்த சிஷ்யனை தன்னிடத்திற்கு வரவழைத்து, ஞானம் சொல்ல ஆரம்பித்தார்கள். அப்படி பழகியவர்கள் இது எல்லாம் நம் குரு அவர்கள் சொல்லும் ஞானம் தான்! என்னும் நினைக்காமல், அப்போது சொன்ன சிஷ்யன் குருவை விட பெரியதாக புகழ்ந்து, கௌரவிக்க ஆரம்பித்தார்கள். இதை எல்லாம் கவனித்தால் ஞானம் போதிப்பது முக்கியமான சேவை தர்மமாக சொன்னால், கடைசியில் அது சேவையாக பார்ப்பதற்கு தெரிந்தால், உள்ளே கூலியாக மாற ஆரம்பித்தது. செய்த வேலை பலனுக்கு அடைந்த சேவை அல்ல கூலியாக தெரியாமல் மறைத்து, அவர்கள் சரியாக இருக்கிறோம் என்று பிரம்மிக்கச் செய்தது. ஞானம் போதித்து

நல்ல வேலை செய்ய, குரு ஞானத்தை போதிக்க அனுமதி கொடுத்தால், ஞானம் போதிப்பது கடவுள் சேவையில் முக்கிய தர்மம் ஆனால், குரு அவர் சொல்வது, செய்வது, அது முழுமையான தர்மமாக இருந்தது. அதே சிஷ்யர்கள் இடம் வந்தபோது தர்மம் தர்மமாக இருக்காமல் வேறு விதமாக மாற்றம் ஏற்பட்டது. சேவை போய் கூலியானது. யாராவது கொடுத்தால் ஒவ்வொன்றும் கடவுள் சேவைக்கு உபயோகிக்க வேண்டும் என்ற சூத்திரத்தை பக்கம் வைத்து, தன்னுடைய லாபத்திற்கு, தனக்கு உபயோகத்திற்கு, ஞானம் சொல்வதற்கு இவ்வளவு கொடுக்கணும் என்னும், ஒவ்வொருவர் இடம் கேட்கும் சூழ்நிலை வந்தது என்பதினால், தர்மம் குரு விடம் ஒரு மாதிரி சிஷ்யர்கள் இடம் இன்னொறு மாதிரி நடக்கின்றது என்று அர்த்தமாகின்றது. இந்த விதமாக கடவுள் தெரிவித்தபோது தர்மம் சம்பூர்ணமாக இருக்கும், அது மனிதன் தெரிவித்தால், சிறிது தரம் குறைவாக இருக்கும். அதனால் கடவுள் ஞானத்தை கடவுளே தெரிவிக்க வேண்டும். கடவுள் தெரிவித்தபோது அது கௌரவ பிரதானம் சம்பூரணமாக உள்ளதாகும். கடவுள் தெரிவித்த பிறகு அதை மனிதன் பழகிக்கொண்டு சொல்லினால் அதில் சிறிது தரக்குறைவு ஏற்பட்டு, சம்பூர்ண கௌரவமாக இருக்காது. மனிதனில் மாயை அப்படி செய்து, கடவுள் தர்மத்தை கடவுள் மட்டும் தான், வேறு யாரும் சொல்ல முடியாது என்று செய்கிறது. மேற்சொல்லப்பட்ட உதாரணம் பொருத்து கடவுள் தர்மத்தை எதுவானாலும் கடவுளே தெரிவிக்க வேண்டும், மனிதர்கள் சொல்ல முடியாது, அப்படி தெரிவித்தாலும் தவறான வழியில் சொல்வர் என்று தெரிகின்றது. கடவுள்

சுயமாக பகவான் அவதாரமாக வந்து பகவத்கீதையில் தெரிவித்தார். கடவுள் தெரிவித்த பகவத்கீதையில் தெய்வ தர்மமே இருக்கிறது. ஆனால் மனிதன் தலையில் வந்தபோது, அதிலுள்ள மதிப்பு மாறிப்போய், கடவுள் சொல்லி தெரிவித்ததை, அது வேறு விதமாக மாறி போனது. அதனால் பகவத்கீதை மனிதர்களிடம் இப்போதுவரை ஒன்றே அபிப்பிராயம் சம்பவிக்கவில்லை. கடவுள் சொல்லியது ஒரு விதமானால், மனிதர்கள் அதை எத்தனையோ விதமாக அர்த்தம் செய்து கொண்டர்கள். இதை பொறுத்து கடவுள் சொல்வது தர்மம் மனிதர்கள் சொல்வது தர்மம் அல்ல என்று தைரியமாக சொல்லலாம். எங்கேயாவது தர்மம் முன் மனிதர்கள் பெயர் இருந்தால், மனு தர்மசாஸ்திரம், தூதர் மோசேதர்ம சாஸ்திரம், யோசே தர்ம சாஸ்திரம் சில கிரந்தங்களில் சொல்வது எங்கேயாவது மனிதர்கள் பெயரில் தர்மசாஸ்திரம் இருந்தால், வாஸ்தவமாக அது தர்மசாஸ்திரம் அல்ல. கடவுள் தவிர, மனிதர்கள் யாரும் தர்மசாஸ்திரம் சொல்ல முடியாது. மனிதர்கள் சொல்லியது தர்மசாஸ்திரம் அல்ல என்னும் நான் சொன்னால் சிலர் ஆச்சர்யமாக என்னைப் பார்த்து இந்தவிதமான கேள்வி கேட்கிறார்கள். கேள்விக்கு தகுந்த எங்கள் பதில் இருக்கும் பாருங்கள்.

**கேள்வி:**-பைபிள் கிரந்தத்தில் மோசே தர்மசாஸ்திரமும், யோசே தர்மசாஸ்த்திரமும், மோசே தூதர், யோசே தூதர் எழுதியதாக உள்ளது. அப்படிப்பட்ட தூதர் எழுதியது தர்ம சாஸ்திரங்கள் அல்லவா?

**பதில்:-**மோசே தூதர், யோசே தூதர் இருவரும் சாதாரண மனிதர்கள் ஆனதினால், அவர் எழுதியது தர்மசாஸ்திரம் அல்ல என்று சொல்லலாம். கடவுள் தவிர மனிதர்கள் யாரும் தர்மசாஸ்திரம் சொல்ல முடியாது.

**கேள்வி:-**தூதர் ஆகிய இயேசு சொல்லிய பைபிள் நீங்கள் தர்மசாஸ்திரம் என்று ஒரு சந்தர்ப்பத்தில் சொன்னீர். தூதர் ஆகிய இயேசு கூட மனிதன்தானே! அப்படிப்பட்ட இயேசு சொல்லியது தர்மசாஸ்திரம் ஆகும்போது தூதர் மோசே, யோசே சொல்லியது தர்மசாஸ்திரம் எதற்கு ஆகாது?

**பதில்:-** இயேசு தூதராக இருந்தாலும் மனிதன் அல்ல. இயேசு மனிதன் போல் உள்ள பகவான். சாக்ஷாத் கடவுளின் அவதாரமே இயேசு. அதனால் இயேசு சொல்லியது தர்மசாஸ்திரம் என்று சொல்லினோம். தூதர் ஆகியவர் சாதாரணமான மனிதன் ஆகலாம், அல்லது பகவான் கூட ஆகலாம். தூதரனாலும் சொல்பவர் எல்லோரும் பகவான் இருக்க மாட்டார்கள். அப்படி எல்லோரும் சாமான்யமான மனிதர்கள் கூட இருக்க மாட்டார்கள்.

**கேள்வி:-**கடவுள் பற்றி எழுதுவது ஏதாவது தர்மசாஸ்திரம் ஆகும்போது, இயேசுவை நீங்கள் பகவான் என்னும் சொல்லும்போது, அதை இயேசு என்னைப் பற்றி மோசே எழுதியுள்ளார் என்னும் பைபிளில் யோவான் சுவிசேஷம் ஐந்தாவது அதிகாரம் **46**-ஆவது வசனத்தில் சொல்லியுள்ளார். அவர் பற்றி எழுதியது தர்மசாஸ்திரம் அல்ல என்று கூறுகிறீர்களா?

**பதில்:-**இயேசு கடவுள் அவதாரம் பகவான் என்னும், அவரைப் பற்றி மோசே எழுதியது தர்மசாஸ்திரம் அல்ல. எதற்காக என்றால் மோசே இயேசுவைப் பற்றி எழுதியதில், அதில் தர்மத்தைப் பற்றி எழுதவில்லை. இயேசுவின் ஜீவித சரித்திரம் மட்டும் எழுதினார். அதனால் அது ஜோதிட சாஸ்திரம் ஆகும் தவிர, தர்மசாஸ்திரம் ஆகாது. கடவுள் தர்மங்களே தர்மசாஸ்திரம் என்னும் சொல்லலாம் அல்லது பிரம்மவித்யசாஸ்திரம் என்று சொல்லலாம். பூமி மேல் ஆறு சாஸ்திரம் உள்ளன. ஆறு சாஸ்திரங்களில் பெரியது பிரம்மவித்யசாஸ்திரம் அல்லது தர்மசாஸ்திரம் என்று சொல்லலாம். தர்ம சாஸ்திரம் மற்ற ஐந்து சாஸ்திரங்கள் முதலில் கணித சாஸ்திரம், இரண்டாவது ககோள சாஸ்திரம், மூன்றாவது ரசாயன சாஸ்திரம், நான்காவது பௌதீக சாஸ்திரம், ஐந்தாவது ஜோதிட சாஸ்திரம் மிக பெரியது. மோசே சொல்லியது இயேசு பற்றி வருங்காலம் நடக்கும் நிகழ்வுகள், அதனை ஜோதிடசாஸ்திரம் என்றும் சொல்லலாம், தர்மசாஸ்திரம் என்று சொல்லக்கூடாது. தர்ம சாஸ்திரத்தில் கடவுள் விதானம் இருக்கும். தர்மசாஸ்திரம் கடவுளே சொல்ல வேண்டும், மனிதர்கள் சொல்லமாட்டார்கள். இயேசுகூட "கடவுள் சொல்லிய தர்மசாஸ்திரம் பிரகாரமாக நடத்துவதற்கு நான் வந்தேன், ஆனால் மனிதர்கள் சொல்வதற்கு வரவில்லை" ஆனால் மோசே சொல்லியது தர்மசாஸ்திரம் அல்ல. மோசேவுக்கு அந்த அனுகிரகம் கொடுக்கவில்லை என்னும் யோவான் சுவிசேஷம் 6-ஆவது அதிகாரம் 32, 33 வாக்கியத்தில் இப்படி இருக்கிறது "(32) பரலோகத்தில் வந்த ஆகாரம் மோசே உங்களுக்கு கொடுக்கவில்லை. என் தந்தை

பரலோகத்தில் இருந்து வந்த நிஜமான ஆகாரம் உங்களுக்கு கொடுக்க அனுகிரகித்தார். **(33)** பரலோகத்தில் இறங்கி வந்து பூலோகத்திற்கு ஜீவம் கொடுத்த கடவுள் அனுகிரகம் கொடுத்து ஆஹாரமாய் உள்ளது என்று உங்களிடம் நிச்சயமாக சொல்லுகிறேன்". இங்கு சொல்லியது இந்த வாக்கியத்தில் சிறிது எழுத்துக்கள் அர்த்தம் புரியாமல் போகலாம். அதனால் அந்த விவரம் சொல்லலாம் என்று கூறுகிறேன். பரலோகத்தில் இருந்து இறங்கி வந்த ஆகாரம் என்னும் வாக்கியத்தில் விவரங்கள் சொல்லப்பட்டால், பரலோகம் என்றால் கடவுளிடம் இருந்து என்று அர்த்தம். இறங்கி வந்த ஆகாரம் என்றால் ஞானம் உருவமாக இருக்கின்ற கடவுள் தர்மங்கள் என்று தெரிந்துக்கொள்ளலாம். கடவுள் தர்மம் மோசே உங்களுக்கு கொடுக்கவில்லை என்று மேல் வாக்கியத்தில் உள்ளது. ஆனால் மோசே எழுதியது தர்மசாஸ்திரம் அல்ல என்று சுயமாக இயேசு சொல்லினார். **(33)** வாக்கியத்தில் கடவுளை அனுக்கிரகித்து ஆகாரம் பூலோகத்தில் ஜீவம் கொடுத்து இருக்கிறது என்று சொல்லியதாகும். இதன் அர்த்தம் கடவுள் தெரிவித்த தர்மம் (ஞானம்) உலகத்தில் மனிதனுக்கு மோட்சம் கொடுப்பது என்று தெரியப்படுத்தியுள்ளது. இங்கு பூலோகத்தில் ஜீவம் கொடுத்ததை என்றால் ஜீவம் என்னும் எழுத்துக்கள் நிரந்தரமாக இருக்க அல்லது நிரந்தரமாக வாழ்வு மோட்சம் என்று தெரிவிக்கலாம். வாழ்வு என்னும் எழுத்துக்கள் மோட்சத்தை பற்றி உபயோகித்தது என்று தெரிவித்தது. இந்த இரண்டு வாக்கியத்தில் மோட்சம் கொடுக்கும் தர்மங்களை மோசே சொல்ல வில்லை. தர்மங்களை கடவுளே

சொல்லினார். கடவுள் சொல்லிய தர்மத்தினால் மனிதனுக்கு நித்திய, அழிவில்லாத மோட்சம் கிடைக்கும் என்று உள்ளது. மேல் உள்ள விஷயம் மோசே சொல்லியது தர்மசாஸ்திரம் அல்ல என்று சொல்வதற்கு சாட்சியமாக உள்ளது. ஆனால் இதுவரை மோசே சொல்லியது தர்மசாஸ்திரம் என்னும் சிலர் சொல்லினால், அல்லது எல்லோரும் சொல்லினால் கூட அது சத்தியம் அல்ல என்னும், மோசே சொல்லியது ஜோதிட சாஸ்திரம் தான், தர்மசாஸ்திரத்தை கடவுள் தவிர யாருமே சொல்ல முடியாது என்று தெரிகிறது.

**கேள்வி:-**மோசே தூதர் மனிதன் ஆனதினால் அவர் சொல்லியது தர்மசாஸ்திரம் அல்ல என்று கூறுகிறீர்கள் அல்லவா! அப்படியானால் பகவத்கீதை, பைபிள் சொல்லியது பகவான் ஆனதினால், பிறகு எழுதியது மனிதன் தானே! அப்படியானால் மனிதர்கள் எழுதுவதை தெய்வ கிரந்தம் என்று சொல்கிறார்கள் தானே! தெய்வ கிரந்தம் என்றால் தர்மசாஸ்திரம் தானே! இங்கு மனிதர்கள் எழுதியது தர்மசாஸ்திரம் ஆகும்போது அங்கே தூதர் மோசே எழுதியது தர்மசாஸ்திரம் என்று சிலர் சொல்வது தவறானதா?

**பதில்:-**இந்த பதில் யோவான் சுவிசேஷம் **6**-ஆவது அதிகாரம், **32, 33** வாக்கியத்தில் நினைவு செய்வது முன்னே கேட்க வேண்டும். இந்த இரண்டு வாக்கியத்தில் சொல்லிய பிறகு மோசே உங்களுக்கு தர்மசாஸ்திரம் சொல்லவில்லை என்னும் இயேசு சொல்லிய பிறகு இந்த கேள்வி கேட்பதற்கு அர்த்தம் இல்லை. ராமாயணம் அனைத்தும் கேட்ட பிறகு ராமனுக்கு சீதை மனைவியானால் ராவணனுக்கு என்ன ஆகும்? என்று

கேட்டதாக உள்ளது. ஆனால் நாங்கள் சொல்வது என்னவென்றால்! வேறு அவருக்கு சீதை ஏதாவது ஆகலாம் ஆனால் மனைவி அல்ல ராமன் ஒருத்தனுக்கு மட்டும் மனைவி என்னும் சொன்னதுபோல் தர்மசாஸ்திரம் சொல்லியவர் கடவுள் ஒருவர் தான், வேறு அவர் சொல்லியது எந்த சாஸ்திரம் இருந்தாலும், தர்மசாஸ்திரம் அல்ல என்று சொல்கிறோம். தர்மசாஸ்திரம் கடவுள் மட்டும் தான் சொல்ல முடியும் வேறு யாரும் சொல்ல முடியாது. கடவுள் சொல்லியதை மனிதன் எழுதினால், அது கடவுள் சொல்லியது தான் மனிதன் சொல்லியது போல் அல்ல.

**கேள்வி:-**தெய்வ கிரந்தத்தில் தர்மசாஸ்திரத்தில் கூட சிறிது காலுஷ்யத்திற்கு குறியானது என்று நீங்கள் முதலில் சொன்னீர்கள் அல்லவா!

**பதில்:-**ஆமாம் முதலில் கூட இப்பவும் கூட முதல் "பிரதம தெய்வ கிரந்தம் பகவத்கீதை." அந்த கிரந்தத்தில் அதே வார்த்தை எழுதியுள்ளோம். முதலில் கடவுள் சொல்லும்போது அது தூய்மையான தர்மசாஸ்திரம் மனிதன் இடையில் வந்ததினால் தர்மசாஸ்திரம் கூட சிறிது மாசுபாடு சேர்ந்தது என்று சொல்லினோம். அந்த மாசுபாடு எப்படி இருக்கிறது, எங்கே இருக்கிறது என்னும் காண்பித்து, அதனை எடுத்து விட்டு மாசுபாடு இல்லாமல் பரம, பவித்ர, பரிசுத்த கிரந்தமாக பகவத்கீதையில் காட்டப்பட்டது. பைபிள், குரான் என்னும் பெயரில் உள்ளது கூட தெய்வ கிரந்தமே என்னும், அவற்றில் உள்ள மனிதனினால் மாசுபாடுவதை விரல் நீட்டி காட்டி, அது

கூட பரிசுத்த, புனித கிரந்தங்களாக இருக்கவேண்டும் என்று முயற்சிக்கிறோம்.

**கேள்வி:-**கடவுள் சொல்லியதை தெய்வ கிரந்தங்களில், அவற்றை தர்மசாஸ்திரம் என்று சொல்கிறோம். கடவுள் சொல்லியது கடவுளுக்குத் தெரியும் என்னும் சூத்திரம் பிரகாரம் அந்த கிரந்தங்களில் எது சத்தியம், எது அசத்தியம் என்று கடவுளுக்கு தெரியும். அப்படியானால் இது நான் சொல்லிய ஞானம் அல்ல, மனிதன் சொல்லியது. இது தர்மம், இது தர்மம் அல்ல என்னும் கடவுள் சொல்லிய, கிரந்தத்தில் கலந்த மாசுபாடு காட்டலாம். ஆனால் ஒரு மனிதனாகிய நீங்கள் இது தர்மம், இது தர்மம் அல்ல என்னும் அவற்றில் உள்ள மாசுபாடு எப்படி காண்பிப்பீர்? உங்களுக்கு எப்படி தெரியும்?

**பதில்:-**நல்ல கேள்வி கேட்டீர்கள். இந்த விஷயம் நான் “பிரதம தெய்வ கிரந்தம் பகவத்கீதை” என்னும் கிரந்தத்தில் விவரித்து சொல்லியுள்ளோம். முதலில் பூமி மேல் கடவுள் தன்னுடைய ஞானத்தை மூன்று விதமாக பிரவேசிக்க செய்தார். இப்போது அதில் உள்ள தவறை ஒரு விதமாக சரி செய்கிறார். ஒரு மனிதனில் உள்ள ஆத்மா மனிதன் மூலம் தர்மசாஸ்திரத்தில் கலந்து போன தவறை காண்பித்து, வெளியே மனிதர்கள் எல்லாருக்கும் தன் சாஸ்திரத்தில் உள்ள தவறை தானே வெளியே வைத்ததாக செய்தார். ஆகாசவானி மூலம், திரைப்பிண்ணாடி உள்ள கிரகங்கள் மூலம், மனிதனான பகவான் மூலம் மூன்று விதமாக தன் தர்மத்தை தெரிவித்த கடவுள், மனிதனில் உள்ள ஆத்மா

மனிதனோடு தன் சாஸ்திரம் கலந்துப்போன தவறுகளை வெளியிட செய்யும் வேறு ஒரு விதானம் கடவுள் பூமி மேல் வந்து புதிய படைப்பு செய்து, கலந்த தவறை வெளியேற்றுவது கூட நடந்து வருகிறது. கடவுள் மூன்று விதமாக தன் தர்மங்களை சாஸ்திரமாக போதித்து, ஒருவிதமான தவறை சரி செய்ய செய்முறை ஏற்படுத்தினார். இங்கு மொத்தம் நான்கு விதத்தில் மூன்று விதானம் போதிப்பது, ஒரு விதானம் கலந்த தவறை வெளியேற்றி சுத்தம் செய்வது. ஒரு வீடு கட்டியபிறகு அந்த வீடு சுத்தம் செய்யும் பொறுப்பு வீட்டு எஜமானுடையது, தர்மசாஸ்திரம் என்னும் வீட்டை நிர்மிக்கப்பட்ட பிறகு கடவுள் ஒவ்வொரு தடவை அந்த வீட்டில் விழுந்த குப்பையை நீக்கி சுத்தம் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அதனால் மூன்று விதானம் மூலம் தன் தர்மத்தை தெரிவித்தார், ஒரு விதானம் பிரகாரம் அதில் உள்ள சேர்ந்த காலுஷ்யம் கூட நீக்கப்பட்டது. மூன்று விதத்திற்கு எல்லாம் வேறாக உள்ள மற்றொரு விதானத்தை அனுசரித்து தர்மத்தின் மேல் உள்ள குப்பையை உதரி அதை பிரகாசிக்க வேண்டும் என்று தெரியப்படுத்துகிறோம். அந்த விதானத்தை ஏதோ ஒரு மனிதன் மூலம் செய்ய வேண்டியதிருக்கும். மேலும் இப்போது அப்படியே செய்தார் என்று எதற்கு நினைக்கக்கூடாது?

**கேள்வி:-**நீங்கள் சொல்லிய அதன் பிரகாரம் மூன்று விதானமுடன் கடைசி மூன்று விதானத்தில் மனிதனான பகவான் தர்மத்தை தெரிவித்தார். தர்மத்தில் உள்ள மாசுபாடு எடுத்து விட்டு சுத்தம் செய்வதர்க்கு மனிதன் மட்டும் தான்

உபயோகப்படுவானா. இல்லையெனில் மனிதன் போல் உள்ள பகவான் அந்த வேலையைச் செய்வாரா?

**பதில்:-**மனிதன் போல் உள்ள பகவான் என்னும் சொல்லினால் பகவான் இரண்டு விதமாக வேலை செய்வதாகும். அப்போது கடவுள் சொல்லிய வார்த்தைக்கு எதிர் சொல்லாக பகவான் மூன்றாவது விதானம் ஆகாமல், நான்காவது விதானம் செய்வது ஆகும். அப்படி ஆகாமல் பகவான் மூன்றாவது விதானம் பிரகாரம் ஞானம் சொல்லி, நான்காவது விதானம் பிரகாரம் மனிதனில் உள்ள ஆத்மா செய்கிறது என்று சொல்கிறோம். மூன்றாவது விதானத்தில் பரமாத்மாவே ஆத்மாவை போல் வேலை செய்கிறது. நான்காவது விதானம் ஆத்மா பரமாத்மாவை போல் வேலை செய்கிறது. ஆனால் பரமாத்மா ஆத்மா இரண்டும் உடலில் தெரியாமல் இருக்கிறது. மேலும் எங்கு பரமாத்மா ஆத்மாவை போல் சொல்லுகின்றதோ, எங்கு ஆத்மா பரமாத்மாவை போல் சொல்லுகின்றதோ, யார் சொல்லியது மூன்றாவது விதானம், யார் சொல்லியது நான்காவது விதானம், யார் பகவானாக உள்ள மனிதனோ, யார் மனிதனாக உள்ள பகவனோ யாருக்கும் அர்த்தம் ஆகாது.

**கேள்வி:-**நான்காவது விதானத்தை சொல்லியவர் மனிதனா, பகவானா? எதுவும் அர்த்தம் ஆகாமல் சொல்லுகிறீர். உண்மையாக யார் என்று சொல்லுங்கள்?

**பதில்:-** முதலில் பூமிமேல் எங்கு மூன்றாவது விதானம் பிரகாரம் ஞான போதனை நடக்கிறதோ. எங்கு நான்காவது விதானம் பிரகாரம் தர்மங்கள் சுத்திகரிக்கப்படுகிறதோ

சொல்லுங்கள், அப்போது அங்கே சொல்லியது யார் என்று பார்த்துச் சொல்வேன்.

**கேள்வி:-**பகவத்கீதையில் தர்மத்திற்கு குறைவு ஏற்படும்போது நான் வந்து தர்மங்கள் எது என்னும் தெரியப்படுத்துவேன் என்று சொல்லினார். அப்போது புதிய தர்மத்தை தெரியப்படுத்துவதற்கு வருவாரா இல்லையெனில் முதலில் உள்ள தர்மத்தை சுத்தம் செய்து காண்பிப்பாரா?

**பதில்:-** முதல் தெய்வ கிரந்தம் பகவத்கீதையில் ஞானயோகம் அத்தியாம் **9**-ஆவது சுலோகத்தில் “நான் எங்கு பிறந்தேன், என்ன செய்கிறேன் அப்படிப்பட்ட என் ஜென்மம், என் வேலை தெரிந்த மனிதன் மரணத்திற்கு பிறகு மறுபடி ஜென்மத்திற்கு போகமாட்டான். அப்படிப்பட்டவன் என்னோடு ஐக்கியம் ஆவான்” என்று சொல்லினார்.

**சுலோகம்:** ஜென்ம கர்ம சா மே திவ்யம் ஏவம் யோ வெத்தி தத்வத்தஹ,

தியக்வ தேகம் புனர் ஜன்ம நெய்த்தி மாமேதி சோர்ஜூன,,

இது எல்லாம் கவனித்தால் முதல் விதானத்தை ஆகாசவாணி, இரண்டாவது விதானத்தை கிரகங்கள் தெரிவித்தது என்னும், மூன்று நான்கு விதானத்தில் எது மூன்றாவது, எது நான்காவது சொல்ல முடியாது. அதனால் கடவுள் கூட மூன்று விதானம் வரை சொல்லி விட்டுவிட்டார்.

**கேள்வி:-**கடவுளே சொல்லாமல் விட்டுவிடும் போது நான்காவது விதானம் பற்றி நீங்கள் எப்படி சொல்கிறீர்கள்?

**பதில்:-** நான்காவது விதானம் எந்த மனிதனும் கண்டுபிடிக்க முடியாது, சொல்லவும் முடியாது நான் முதலிலேயே சொன்னேன். அதனால் நான்காவது விதானம் பற்றி எனக்கு கூட தெரியாது. ஆனால் என் உள்ளே இருக்கும் ஆத்மாவுக்குத் தெரியும், ஆனால் பரமாத்மாவான கடவுள் உடலில் உள்ள தலைமையாக உள்ள ஆத்மா உடன் சொல்ல வைத்தார். ஆத்மா சொல்லும் போது, ஜீவாத்மா ஆகிய எனக்குத் தெரியாது என்று சொல்கிறோம்.

**கேள்வி:-**உங்களுக்கு தெரியாமல் உங்களில் உள்ள ஆத்மாவுக்கு எப்படி தெரியும்?

**பதில்:-**முதலில் சொன்னேன் அல்லவா! எனக்கும் பரமாத்மாவுக்கு தொடர்பு இல்லை. பரமாத்மாவுக்கும் ஆத்மாவுக்கே தொடர்பு இருக்கும். அதனால் பரமாத்மா தெரிவித்த விஷயம் ஆத்மா என் உடலில் இருந்து தெரிவித்தது. அப்படியாகும்போது நான் சொல்வது இல்லை அல்லவா!

**கேள்வி:-**இது ஏதோ பெரிய குழப்பமாய் இருக்கிறது. எதுவும் அர்த்தம் ஆகாமல் சொல்கிறீர்கள்.

**பதில்:-**எனக்கு அர்த்தம் ஆகாமலே நான் சொல்கிறேன். எவருக்கும் அர்த்தம் ஆகாமல் போக வேண்டும் என்று கடவுள் சொல்லினார்.

**கேள்வி:-**கடவுள் யாருக்கும் அர்த்தம் ஆகக்கூடாது என்று எதற்கு நினைக்கிறார்?

**பதில்:-**அவர் ஜென்மம், அவர் வேலையானாலும் யாருக்காவது அர்த்தமானால் அவருக்கு சுலபமாக மோட்சம் கிடைக்கும். எவ்வளவோ ஞானம் தெரிந்தாலும் யோகம் செய்யப்பட்டாலும் கிடைக்காத மோட்சம் சுலபமாக கிடைப்பது கடவுளுக்கு இஷ்டம் இல்லை. அதனால் தன் ஜென்மம், தன் கர்மத்தை மனிதன் ஞானம், யோகம் மூலம் தெரிய வேண்டும் என்னும் அப்படி ஆகாமல் சுலபமாக தெரியக்கூடாது என்னும் அவர் பூமி மேல் உத்தரவிட்டு மூன்றாவது விதானம், நான்காவது விதானம் யாருக்கும் அர்த்தம் ஆகாமல் செய்தார்.

**கேள்வி:-**இறுதி தெய்வ கிரந்தமான குரான் கிரந்தத்தில் **42** ஆவது சூறா, **51** ஆயத்து கடவுள் மூன்று விதமான தன் தர்மத்தை ஞானத்தால் தெரிவிப்பேன் என்று சொல்லினார். அதனால் அது பிரம்மவித்ய சாஸ்திரம் பிரகாரம் சொல்லியது என்று தெரிகிறது. ஆனால் நீங்கள் சொல்லிய நான்காவது விதானத்திற்கு எங்காவது சாஸ்திரம் பிரகாரம் உள்ளதா? தெய்வ கிரந்தத்தில் எங்கேயாவது நான்காவது விதானத்தை சம்மந்தப்பட்டுள்ளதாக கடவுள் சொல்லினாரா?

**பதில்:-**எதற்கு சொல்ல வில்லை? சாஸ்திரம் பிரகாரம் இல்லாமல் அவர் விதானம் எதுவும் இருக்காது. பகவத்கீதையில் ஞானயோகத்தில் ஏழாவது சுலோகம் பாருங்கள்.

**சுலோகம்:** ஏதா ஏதா ஹி தர்மஷ்யா கிலாநிர்பவதி பாரத்தா!
அப்பியுத்தனம்மாதர்மஷ்யா ததாத்மானம் சுரஜிமம்யஹம்.

இந்த சுலோகத்தில் அர்த்தம் இப்படி இருக்கிறது. “தான் முதலில் சொல்லி உள்ள தர்மத்திற்க்கு குறைவு என்னும் சிறுது மாசுபாடு ஏற்பட்டபோது நான் பிறந்து வந்து (மனிதனாக வந்து) அதர்மம் என்னும் மாசுபாட்டை அகற்றி, தர்மத்திற்கு தடங்கல் இல்லாமல் பிரகாசமாக தெரிய செய்கிறேன்” என்று சொல்லும் போது இருந்த தர்மத்திற்கு ஏற்பட்ட குறைவு இல்லாமல் செய்து அவற்றில் உள்ள காலுஷ்யத்தை எடுத்துவிட்டது ஆகும் அல்லவா! அதனால் இந்த சுலோகம் நான்காவது விதானத்திற்கு ஆதாரம் அல்லவா?

**கேள்வி:-**இந்த சுலோகம் நான்காவது விதானத்திற்கு சம்மந்தப்பட்டதனால் மூன்றாவது விதானத்திற்கு சாஸ்திர ஆதாரத்திற்கு இல்லாமல் போகும் அல்லவா! இதுவரை கடவுள் வந்து பூமி மேல் ஞானத்தை தெரிவிப்பதற்கு அந்த சுலோகம் ஆதாரமாக இருக்கும் என்று நினைத்தோம். இப்போது மூன்றாவது விதானத்திற்கு சாஸ்திரம் ஆதாரம் என்ன உள்ளது?

**பதில்:-**இருந்த தர்மத்திற்கு காலுஷ்யம் ஏற்பட்டபோது பலஹினம் என்னும் காலுஷ்யத்தை எடுத்துவிட்டு நீக்குவதற்கு வருவேன் என்னும் ஆதாரத்தை காண்பித்து ஞானயோகத்தில் ஏழாவது சுலோகம் சொல்லினார். முழுமையாக தெரியாமல் போன தர்மத்தை மறுபடியும் தர்மம் தெரிவிப்பதற்கு தர்மங்களை புதியதாக தொடங்கி வைப்பதற்கும் மூன்றாவது விதானமாக வருவேன் என்னும் ஞானயோகத்தில் எட்டாவது சுலோகத்தில் சொல்லினார் பாருங்கள். (தேகத்தில் வலிமை

குறைவு ஏற்படும். வேலை செய்யும் உடம்பில் தயாரான காலுஷ்யத்தினால் சிறிது பலஹீனம் ஏற்படுவது கிலானி (வலிமை குறைவு) என்று சொல்லலாம். உடம்பில் உள்ள பலம் சிறிது குறைவதை கிலானி (பலஹீனம்) என்று சொல்கிறோம். உடலில் உள்ள காலுஷ்யம் வியர்வை வழியில், மூத்திரம் வழியில், சுவாச துவாரத்தின் வழியே போகும். பலஹீனம் ஏற்பட்ட அலைச்சல் இருந்த மனிதன் சிறிது இடைவேளை கொடுத்தால் மறுபடியும் பலம் வரும். இருந்த பலத்தில் சிறிது வலிமை குறைந்தால், இடைவேளைக்கு பின் மறுபடியும் முழுமையாக பலம் வரும். அப்படியே இருந்த தர்மமும் வெளியே மனிதர்கள் செய்த காலுஷ்யத்தினால் சிறிது பலஹீனமாய் மாறியதால், சிறிது இடைவேளை அடைந்ததினால், என்றால் ஞானம் போதனை என்ற இடைவேளை அடைந்ததினால் பலஹீனம் என்னும் தர்மங்கள் குறைவு இல்லாமல் போகும். இருந்த பலம் சிறிது குறைவானால் பலஹீனம் என்ற வாக்கியம் சொல்லினார். முழுமையில்லாமல் போனதினால் சிறுது குறைந்தப்போது மட்டும் பலஹீனம் என்ற வாக்கியம் உபயோகிக்கப்பட்டது என்று தெரிகிறது. நிலைநாட்டுதல் என்றால் முழுமையாக இல்லாததை நிர்மானம் என்று அர்த்தம். இல்லாததை நிர்மானம் நிலைநாட்டுதல் என்று சொல்லலாம். வெளி உலகத்தில் அரசியல் கட்சிகள் மொத்தம் 10 இருக்கிறது என்று நினைத்து கொள்ளலாம். சிறிது காலத்திற்கு இல்லாத புதிய கட்சி 11-ஆவது தயார் ஆனது என்று நினைத்து கொள்ளலாம். அப்போது அந்த கட்சியில் பலானவர் நாயகனாக தொடங்கி வைத்தார் என்று சொல்கிறோம். இங்கு

தொடங்கியபோது இல்லாததை புதியதாக நிர்மானம் செய்வது என்று அர்த்தம். எட்டாவது சுலோகம் தர்ம சம்ஸ்த்தாபன என்னும் வாக்கியம் உபயோகித்தார் எனவே இல்லாத தர்மத்தை உருவாக்கியது என்னும் இங்கு அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். 7-ஆவது சுலோகத்தில் பலஹினம் என்ற வாக்கியம் உபயோகித்தார், எனவே இருந்த தர்மங்களும் பலஹினம் ஆகும்போது சொல்லிய வாக்கியம் அடையாளிக்க வேண்டும். இதைப்பற்றி 7-ஆவது சுலோகத்தில் தர்மங்களுக்கு சிறிது பலஹினம் ஏற்படும்போது அதர்மங்கள் என்னும் பலஹினத்தை கடவுள் நீக்கிவிடுவார் என்று தெரிகிறது. 8-ஆவது சுலோகத்தில் தர்மங்கள் முழுமையாக இல்லாமல் போகும்போது மறுபடியும் அதனை புதியதாக போதித்து தொடங்கி வைப்பார் என்று புரிந்து கொள்ள வேண்டும்).

**சுலோகம்:**பரித்ராநாய சாது நாம் வினாசாய சதுருஷ்குருத்தாம், தர்ம சம்ஸ்தாபநார்தாய சம்பவாமி யுகே யுகே.

**கருத்து:**“கெட்டவர்கள் இல்லாமல் செய்வதற்கும், நல்லவர்களாக மாற்றுவதற்கு யுக யுகத்தில் பிறக்கிறேன். பிறந்து முழுமையாக இல்லாமல் போன தர்மங்களை மறுபடியும் நிலைநாட்டி, கெட்டவர்களை (அஞ்ஞானிகளை) ஞானிகளாக மாறும்படி செய்கிறேன் என்று சொல்லினார். இங்கு இதே அத்தியாயத்தில் ஒன்று, இரண்டு, மூன்று சுலோகத்தில் உள்ள முதலில் சூரியனுக்கு சொல்லிய ஞானம் சூரியனில் இருந்து உலகம் எல்லாம் பரவி எல்லோருக்கும் தெரிந்து போனது. அப்படி எல்லோருக்கும்

தெரிந்த ஞானம் முழுமையாக பூமி மேல் யாருக்கும் தெரியாமல் போனது. அப்படி தெரியாமல் போன ரகசியமான ஞானம் உனக்கு நான் சொல்கிறேன் ஜாக்கிரதையாய் கேள் என்று சொல்லினார். அப்படி முழுமையாக இல்லாமல் போகும்போது நான் பிறந்து மறுபடி என் தர்மங்களை தெரிவிப்பேன் என்னும் **8**-ஆவது சுலோகத்தில் சொல்லினார். **7**-ஆவது சுலோகத்தில் உள்ள தர்மங்களில் பலஹினம் என்ற காலுஷ்யம் ஏற்படும்போது அதனை எடுத்து போடுவதற்கு வருவேன் என்று சொல்லினார். அதனால் நன்றாக கவனித்து **7**-ஆவது சுலோகம் **4**-ஆவது விதானத்திற்கு, **8**-ஆவது சுலோகம் **3**-ஆவது விதானத்திற்கு ஆதாரமாய் உள்ளது என்று சொல்லலாம்.

**கேள்வி:-**பகவத்கீதையில் **7**-ஆவது சுலோகம் காலுஷ்யத்தை எடுத்துவிட்டு **4**-ஆவது விதானமாய், **8**-ஆவது சுலோகம் முழுமை இல்லாமல் போன தர்மங்களும் தெரிவித்து 3-ஆவது விதானமாய், இதுவரை பகவத்கீதையில் விவரம் யாரும் சொல்லவில்லை. பகவத்கீதையில் சின்ன வாக்கியத்திற்குக் கூட அர்த்தம் சொல்லிய சுவாமிஜிகள் எத்தனை பேர் உள்ளர்கள். அவர் நீங்கள் சொல்லிய **7**-ஆவது சுலோகத்தில் இப்படி இருக்கும் என்னும், 8-ஆவது சுலோகம் இந்த விதமாய் இருக்கும் என்னும் எதற்கு சொல்லவில்லை?

**பதில்:-**எதற்கு சொல்லவில்லை என்று அவரிடம் கேட்க வேண்டும். நான் சொல்லிய விதானங்கள் சத்தியமானதா இல்லையா என்று பாருங்கள். நான் சொல்லியது போல் உங்களுக்கு தெரிந்தால், எனக்கு சொல்லியவர் ஆத்மா

என்னும், ஆத்மா என்னால் சொல்ல வைத்தது என்று முதலிலேயே தெரிவித்தேன். வாஸ்த்தவமாக சொல்லினால் கடவுள் மூன்று விதானமாய் தன் தர்மத்தை தெரிவித்தார் என்னும் மூன்றாவது தெய்வ கிரந்தமான குரானில் சொல்லினார், பகவத் கீதையில் சொல்லவில்லை. பகவத்கீதையில் குரானில் சொல்லியது போல் மூன்று விதம் உள்ளது. ஆனால் கீதையில் உள்ள மூன்று விதானங்கள் யாரும் அடையாளம் காணவில்லை. யாரும் அடையாளிக்காமல் போனால் சொல்லியும் பிரயோஜனம் இல்லை. மேலும் ஏதோ ஒரு மனிதனில் ஆத்மாவுடன் அந்த விதானம் கடவுளே தெரிவித்தார். அப்படிப்பட்ட வாய்ப்பு என் தேகத்தில் என் ஆத்மா உடன் நடந்தது, மேலும் மற்றவர் யாருக்கும் தெரியாத சமாச்சாரம் எனக்கு தெரிந்தது.

**கேள்வி:-**இப்போது ஒரு முக்கியமான கேள்வி கேட்கிறேன். இந்த கேள்விக்கு பதில் அர்த்தம் ஆகும்படி சொல்லுங்கள். கிருஷ்ணர் சொல்லிய பகவத்கீதையில் ஞான யோகத்தில் 7, 8 சுலோகத்தில் மூன்றாவது விதானம், நான்காவது விதானம் இருக்கிறது என்று நீங்கள் சொன்னீர்கள். கிருஷ்ணர் பகவானாக வந்த நாள் மூன்றாவது விதானமாக இல்லாத தர்மத்தை தெரிவிக்க வந்தாரா? அல்லது நான்காவது விதானமாக இருந்த தர்மங்களில் காலுஷ்யம் எடுத்து விடுவதற்கு வந்தாரா?

**பதில்:-**பகவான் பூமி மேல் வந்தால், யாரும் அடையாளம் காண முடியாது என்று முதலிலேயே சொல்லினோம். அதனால் கிருஷ்ணர் பூமி மேல் உள்ளபோது அவர் பகவான்

என்னும் ஒரு பீஷ்மருக்கு தவிர மற்றவர் யாருக்கும் தெரியாது. எதிர் காலத்தில் பகவானுக்கு சாட்சியம் ஆதாரமாக, பீஷ்மருக்கு பகவான் விஷயம் தெரியும்படி கடவுளே செய்தார். அதனால் பீஷ்மருக்கு தெரிந்தது. பீஷ்மருக்கு தவிர, யாருக்கும் கிருஷ்ணர் பகவான் என்னும் விஷயம் தெரியாது. கிருஷ்ணன் கூட நான் மூன்று, நான்கு விதானமும் தெரிவிப்பதற்கு வருவேன் என்று இரண்டு சுலோகத்தில் சொல்லியுள்ளார். ஆனால் ஆதியில் சூரியனுக்கு தெரிந்த ஞானம், சூரியனில் இருந்து பூமி மேல் எல்லோருக்கும் தெரிந்து, கடைசியில் முழுமையாக இல்லாமல் போன தர்மங்கள் தெரிவிப்பேன் என்னும் சொல்லியதால், அவர் மூன்றாவது விதானம் பிரகாரம் புதியதாக தர்மங்களும் தெரிவிப்பதற்கு வந்தார் என்று தெரிகிறது. நான்காவது விதானத்தை பற்றி குறிப்பிட்ட இடத்தில் சொல்வேன் என்று எங்கும் சொல்லவில்லை. அதனால் கிருஷ்ணர் ஜென்மத்தில் மூன்றாவது விதானம் பிரகாரம் தெரியாமல் போன தர்மங்கள் தெரிவிப்பேன் என்று அர்த்தம் ஆகிறது. நான்காவது விதானத்திற்கு அவர் வரவில்லை என்று தெரிகிறது.

**கேள்வி:**-தர்மங்கள் தெரிவிப்பதற்கு வந்தவர் மனிதனாக இருந்த, அவரை பகவான் என்று கூறலாம். பகவனாக வந்த கிருஷ்ணன் ஞான யோகத்தில் 7-வது சுலோகம் தர்மங்களில் சேர்ந்த காலுஷ்யம் கூட எடுத்து விட வருவேன் என்று சொல்லியதினால், 4-வது விதானம் கூட நிறைவேற்றுவதற்கு பகவான் வந்ததுப்போல் ஆதாரம் இருக்கிறது! இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்?

**பதில்:-**நான் முக்கியமான சூத்திரம் சொல்கிறேன். அதன் பிரகாரம் பதில் நீங்களே தெரிந்து கொள்ளலாம். மனிதன் தேகத்தில் பரமாத்மா ஆத்மவைப் போல் நடித்து தர்மங்கள் தெரிவித்தால் அது **3**-ஆவது விதானம் ஆகும். ஒரு வேளை மனிதன் தேகத்தில் ஆத்மா பரமாத்மாவை போல் நடித்து ஞானம் சொல்லினால் **4**-ஆவது விதானம் ஆகும். எதிரில் உள்ள தேகத்தில் ஆத்மா எது, பரமாத்மா எது, தெரியாது நமக்கு எப்போது கடவுள் சொல்கிறாரோ, எப்போது ஜீவன் சொல்கிறதோ என்று அர்த்தம் ஆகாது. அதனால் இந்த விஷயம் எப்படியும் சொல்ல முடியாது.

**கேள்வி:-**பிரம்மவித்ய சாஸ்திரம் என்னும் இந்துக்கள், தர்மசாஸ்திரம் என்னும் கிறிஸ்தவர்கள், தெய்வ கிரந்தம் என்னும் முஸ்லீம்களும் அவர் அவர்கள் கிரந்தங்களை சொல்கிறார்கள். அந்த விதமாக சொல்லியதினால் அவற்றில் வித்தியாசம் இருக்கிறதா?

**பதில்:-**மூன்று ரகம் பெயரில் மூன்று மதத்தினர் அழைப்பது உண்மை தான். ஆனால் மூன்று கிரந்தங்கள் பெயர் வேறாக தெரிந்தால், அவற்றில் உள்ள எண்ணங்கள் மட்டும் ஒன்று தான் உள்ளது. மூன்று கிரந்தங்கள் மூன்று பாகம் அளவில் பெரியதாக சின்னதாக உள்ளது என்னும், அந்த மூன்று கிரந்தங்களில் ஒரே கடவுள் விஷயம் சொல்லியிருப்பதால், மூன்று கிரந்தங்களில் உள்ள விஷயம் மனிதன் எல்லோருக்கும் தேவையான சூத்திரம் சொல்ல வேண்டியதினால் அவற்றில் எந்த வித்தியாசமும் இல்லை என்று சொல்கிறோம்.

**கேள்வி:-** மூன்று கிரந்தம் சமமானப்போது அந்த கிரந்தங்கள் அனுசரிப்பவர்கள் மூன்று மதங்களாக பிரிந்து வேறு வேறு முறையில் எதற்காக இருக்கிறார்கள்?

**பதில்:-** மூன்று கிரந்தங்களுக்கு கிரந்த கர்த்தா ஒருவர் தான் என்னும் தெரியாதவர், ஒரு கடவுள் மூன்று கிரந்தங்களை மூன்று சமயத்தில் கொடுத்தார் என்னும் தெரியாதவர், மூன்று கிரந்தங்களில் அனைத்து மனிதர்களுக்கும் தேவையான ஞான விஷயம் இருக்கிறது என்னும் அடையாளம் காணாதவர், எண்ணங்களில் மூன்று கிரந்தங்களில் ஒரு நோக்கம் கொண்டு, ஒரே ஞானம் போதித்துள்ளது என்னும் தெரியாதவர் கிரந்தங்கள் பெயர் பொருத்து, உருவத்தை பொருத்து ஸ்தூலமாக பார்த்தவர்கள் மூன்று பாகமாய் பிரிந்துபோய் மூன்று மதங்களை சொல்லி, ஒவ்வொரு மதத்தினர் ஒவ்வொரு கிரந்தத்தை அனுசரித்து உள்ளார்கள். அந்தவிதமான ஒரு ஜாதி மனிதர்கள் மூன்று வர்கங்களாக பிரிந்து போன மனிதர்களில் புத்தி குறைவான, முரடன் என்னும், அஞ்ஞானம் என்றும் சொல்லலாம்.

**கேள்வி:-** மூன்று மதங்களில் அவரவர் கிரந்தங்களில் இருந்த ஞானம் தெரிந்து கொண்டார்கள். அவர் கிரந்தத்தில் வாக்கியங்களில், சுலோகங்கள் தாராளமாய் சொல்பவர் ஞானிகள் இருக்கிறார்கள். கஷ்டமாக இஷ்டமாக அவர் மதங்கள் முறைகளை அனுசரிப்பவர் உள்ளார்கள். அவரவர் கடவுளுக்காக எவ்வளவோ பக்தியாக பெயர் பெற்ற பக்தர்கள் உள்ளார்கள். அப்படிப்பட்ட எவ்வளவோ புகழ் பெற்றவர்கள் முன்று மதத்தில் உள்ளார்கள் அல்லவா!

அவ்வளவு புகழ் பெற்றவருக்குக் கூட மூன்று கிரந்தங்களில் ஒரே விஷயம் இருக்கிறது என்று தெரியாதா?

**பதில்:-**தெரிந்திருந்தால் மூன்று மதங்களும் மூன்று வெவ்வேறு முறையில் இருப்பார்களா என்று நான் கேட்கிறேன். மேலும் எவ்வளவோ பெயர் சம்பாதித்தாலும், அந்த பெயரும் புகழ் பெற்ற உலகத்தில் உள்ள விஷயம் தான் தெய்வ விஷயம் ஆகாது. ஒவ்வொருவர் என் மதம் என் மதம் என்னும் சொல்கிறார்கள் தவிர ஒருவராவது எல்லா மதமும் ஒன்றேதான் என்னும், எல்லோருக்கும் ஒரு ஞானம் என்னும், எல்லாருக்கும் கடவுள் ஒருவர் தான், எல்லோரும் ஒரு கம்யம் ஒரு கடவுளில் சேர வேண்டும் என்று நினைக்கிறாரா? மூன்று கிரந்தங்களில் சொல்லியது ஒரு கடவுள் என்னும், மூன்று கிரந்தங்களில் சொல்லியது ஒன்றுதான் என்னும் தெரியாதவர்கள் பெரிய ஞானிகள், சிறந்த நடைமுறை என்பது எங்களுக்கு தெரியும் என்று சொல்வது தவறானது ஆகும். ஒரு மதம் பெயர் சொல்லிக்கொண்டு அவன் எவ்வளவோ பெரிய ஞானி என்றும் சொன்னால், எங்கள் கணக்கில் மற்றும் கடவுள் கணக்கில் அவன் அஞ்ஞானியாக தெரிவான். ஒரு மதத்தில் உள்ளவன் அவன் அனுசரித்து இருந்த கிரந்தங்களில் வாக்கியங்களும் மனப்பாடம் செய்து, தொடர்ச்சியாக சொல்லி இருந்தால் அவனுக்கு இருந்தது ஞாபக சக்தி தான் தவிற, ஞான சக்தி அல்ல என்று சொல்லலாம். உண்மையான கடவுள் ஞானம் தெரிந்தவன் யாரும் தன்னுடையது ஒரு மதம் என்று சொல்ல மாட்டான். மதங்கள் பெயரில் நடத்து கொள்ளுபவர் கடவுளிடம் எப்போதும் நெருங்க மாட்டார்கள். நான் அந்த மதத்தைச்

சேர்ந்தவன் என்னும் கடவுளுடைய நோக்கத்திற்கு எதிர்ச்சொல்லாக சொல்வது ஆகும். கடவுள் எல்லோரையும் ஒரு மார்கத்தில் வந்து, ஒரு கடவுள் என்னும் என்னையே நினைத்து, என்னை ஆராதனை செய்ய வேண்டும் என்னும் நோக்கத்தில் மூன்று கிரந்தங்களில் மூன்று மொழியில் கொடுத்து, அவற்றில் தன்னுடைய எண்ணத்தை தெரிவித்து, கடவுள் எண்ணத்திற்கு எதிர்ப்பாக மனிதன் மதங்கள் பெயரில் பிரிந்துப்போவது தவறு அல்லவா? மூன்று மதங்களில் வெளியே தெரிவதுபோல் எத்தனையோ பெரிய ஞானிகள், போதிப்பவர், சுவாமிஜிகள் உள்ளார்கள். ஆனால் அவருக்கு கடவுள் சொல்லிய சரியான சமய சார்பற்ற ஞானம் தெரியாமல் போவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அதனை விவரித்து சொல்லினால் எந்தவிதமாய் இருக்கிறது. ஒரு மனிதன் வெளி உலகத்திற்கு எவ்வளவோ பெரியவன் இருந்தாலும், அவன் தேகத்தில் அவன் (ஜீவன்) குணங்கள் நடுவில் சிக்கிக் கொண்டான். குணங்களும் தன் நடுவில் சிக்கிக் கொண்ட ஜீவனில் தன் விளைவுக்கு அடிமை செய்து வருகிறது. ஒவ்வொரு குணங்களுக்கும் ஒவ்வொரு விளைவுகள் இருக்கின்றது. குணச் சக்கரத்தில் ஒரு பாகத்தில் உள்ள 12 குணங்களுக்கு 12 விளைவு உள்ளது. வேறு வேறு விளைவுக்கான குணங்களும் எல்லாவற்றை சேர்த்து கடவுள் தன் கிரந்தத்தில் பகவத்கீதையில் “மாயா” என்று பெயர் வைத்தார். எல்லா குணத்தில் உள்ள விளைவில் சிக்கிக் கொண்ட ஜீவனை மாயையில் சிக்கிக் கொண்டான் என்று சொல்லலாம். அந்த கணக்கு பிரகாரம் ஜெகத்தில் மாயையில் சிக்கிக் கொள்ளாமல் (மாயையில்

இல்லாதவன்) எவராவது இருக்கிறானா? இல்லை என்று சொல்லலாம். எதற்காக என்றால் தேகத்தில் உள்ள ஒவ்வொரு (ஒவ்வொரு ஜீவன்) குண சக்கரத்தில் குணங்கள் நடுவில் இருக்கிறான். மேலும் எல்லோரும் மாயாவில் உள்ளார் என்று சொல்லலாம். வெளி உலகத்தில் ஒரு கிறிஸ்துவர் குருவான (போப்பானவர்) முஸ்லீம் பண்டிதரான, ஹைன்தவ சுவாமிஜிகளாக உள்ள உலகத்தில் குணங்களில் மாயயையில் உள்ளனர் என்று சொல்லலாம். அவர்கள் மாயையை ஜெயித்தவர் என்று சொல்லினாலும் பகவத்கீதையில் விஞ்ஞான யோகத்தில் 14ஆவது சுலோகத்தில் "குண மயீ மமமாயா துரத்யயாயா" "குணங்களில் கூடிய என் மாயை தாண்டுவது முடியாது" என்று கடவுள் சொல்லினார். சிலர் நாங்கள் பெரிய ஞானம் தெரிந்தவர்கள் நானே கடவுள் என்றும் நடந்துக் கொள்கிறார்கள். யார் எப்படி இருந்தாலும் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் தேகத்தில் உள்ள எல்லோருக்கும் இடம் ஒன்று தான். மாயை என்னும் கிணற்றில் மூழ்கி வெளியே வர முடியாத சூழ்நிலையில் எல்லோரும் இருக்கின்றார் என்று சொல்லலாம். அதனால் பகவத்கீதையில் கடவுள் என் மாயையை தாண்டுவது முடியாது என்று சொல்லினார். மாயயை பற்றி எவ்வளவோ கச்சிதமாக சொல்லியுள்ளார் மாயயை வெல்வது சுலபமாக முடியாது கடவுள் எதற்கு சொல்லினார் என்று ஆலோசித்தால், குணம் பற்றி சிறிது விவரம் தெரிகிறது. தெய்வம் படைத்த குணங்கள் எவ்வளவோ பலமானது என்றும் அவற்றில் இருந்து யாரும் தப்பிக்க முடியாது என்று தெரிகிறது. உண்மையான

கடவுள் தர்மதை தெரிந்த தலைமையான கடவுளை வேண்டி, அவரையே ஆராதனை செய்பவர் மட்டும் மற்றவர்கள் யாராலும் மாயயைத் தாண்டி வெளியே வர முடியாது.

**கேள்வி:**-சிலர் வேறு தேவதைகளை ஆராதனை செய்யாமல், எல்லோருக்கும் பெரிய கடவுளே என்னும், அவரையே பிரார்த்தனை செய்கிறோம் என்று சொல்கிறார் தானே! மூன்று மதங்களில் இஸ்லாம் மதத்தினர் நாங்கள் அல்லாஹ்வைத் தவிர எவரையும் பிரார்த்தனை செய்யவில்லை, அல்லாஹ் தவிர யாரையும் பெரியதாக நினைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அவர்கூட மாயையில் உள்ளவர்தானே? அவர் மாயையை ஜெயித்து கடவுளுக்கு நெருங்கியவர் அல்லவா?

**பதில்:**-அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை என்றும், அல்லாஹ்வை பிரார்த்தனை செய்ய வேண்டும் என்றும் முஸ்லீம்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவர் கூட மாயையில் இருந்து வெளியே வரவில்லை என்று சொல்லலாம். கடவுள் எல்லோரை விட மிகப் பெரியவர் கடவுளைத் தவிர வேறு ஒருவரை அனுசரிக்கக்கூடாது என்று சொன்னாலும், அவருக்கு கடவுள் தர்மங்கள் எதுவும் தெரியாது. அதனால் எவ்வளவோ பெரிய முஸ்லீம் பக்தனாக ஆகியிருந்தாலும், அவர் மதத்தில் சிக்கிக் கொண்டு இது என் மதம் என்று சொல்கிறார்கள். எப்போது மதம் என்பது மனிதனில் உள்ளதோ, அப்போது அவர் மாயையில் இருக்கிறார் என்று சொல்லலாம். மதம் என்பது எந்த நிலை இருந்தாலும் அவர் குணங்களில் முழுமையாக சிக்கிக்கொண்டார் என்னும் வெளியே வரவில்லை என்று

அர்த்தமாகின்றது. இந்த விதமாக எல்லா மதத்தினோர் மதம் என்னும் முதலில் அஞ்ஞானத்தை ஜெயிக்காமல் போனதினால், மாயை ஜெயிக்கவில்லை என்று கணக்கிடலாம். எல்லோருக்குமே இதே சூத்திரம் தான் என்று தெரியவேண்டும்.

**கேள்வி:**-தேகத்தில் உள்ள மாயை தேகத்தில் உள்ளே ஜீவனை எவ்வளவு பலமாக தன்னோடு வைத்துக் கொண்டது என்றால், மாயைக்கு பலம் எப்படி இருக்கிறது? எந்த விதமாக ஜீவன் மீது வேலை செய்கின்றது?

**பதில்:**-மாயை என்பது கண்ணுக்குத் தெரியாது. மாயை தெரியாமல் உள்ளது. காண்பது குணங்கள் என்று தெரிகிறது. உங்களுக்கு அர்த்தம் ஆகுவதற்கு குணங்களை காணலாம் என்று சொல்கிறோம். உண்மையாக குணங்களை யாரிலும் காண முடியாது. குணங்கள் கண்ணுக்கு தெரியாது. ஞானக்கண் வழியாக பார்த்து தெரிந்து கொள்ளலாம். 12 குணங்கள் கலந்து அவற்றின் சாராம்சத்தை மாயை என்று சொல்கிறோம். மனிதன் தலையில் குணச் சக்கரத்தில் மூன்று பாகம் உள்ளது குணச்சக்கரத்தில் உள்ள ஒவ்வொரு பாகத்தில் 12 குணங்கள் உள்ளது என்று முதலிலே தெரிந்து கொண்டோம். அதில் 6 நல்ல குணங்கள், 6 கெட்ட குணங்கள் உள்ளது. கெட்ட குணங்கள் வரிசையாக, காம, குரோத, லோப, மோஹ, மத, மஷ்தர இந்த 6 குணங்கள் கெட்டதாகும். நல்ல குணங்கள் வரிசையாக தான, தய, அவ்தர்யா, வைராக்கியா, வினையா, அன்பு இந்த 6 நல்ல குணங்கள் ஆகும். வரிசையாக உள்ள கெட்ட குணங்களுக்கு நல்ல குணங்களுக்கு எதிராக உள்ள அதே வரிசையில்

ஒவ்வொன்றுக்கும் ஒன்று எதிரில் உள்ளது. காமத்திற்கு தானம், எதிரே உள்ள குரோதத்திற்கு இரக்கம், லோபத்திற்கு அவ்தார்யம், மோகத்திற்கு வைராக்கியம், கர்வத்திற்கு வினையம், பொறாமைக்கு அன்பு எதிரில் உள்ளது. எதிரில் உள்ள கெட்ட குணங்களுக்கு விளைவுகள் எதிராக நல்ல குணங்கள் விளைவாக உள்ளன. கெட்ட நல்ல குணங்களில் அவற்றின் தனித்தனியே சொல்வதற்கு அதனில் வந்த பலன்களும் நல்லது, கெட்டது புண்ணிய பாவங்களும் இருப்பதினால் அப்படி சொல்லியது ஆகும். 12 குணங்களில் வேறு வேறு விளைவுகள் இருக்கும் என்னும் சொல்லியுள்ளோம் அல்லவா! அந்த முறை பிரகாரம் கெட்டகுணங்கள் முதலாவது ஆசை (காமம்) என்னும் குணங்களுக்கு ஒருமுக்கியமான விளைவுகள் உள்ளன. அதற்கு எதிராக எதிர் உள்ள தானம் என்னும் குணங்கள் கூட முக்கியமான விளைவு உள்ளன. இந்த விதமாக ஒவ்வொரு குணங்களுக்கு ஒவ்வொரு விளைவுகள் இருக்கிறது என்று தெரிகிறது. குணங்கள் ஸ்தூலமானது அல்ல. சூட்சமமானது இதனைப் பற்றி குணங்கள் தெரியாமல் உள்ளது என்று சொல்லலாம். சூட்சமமாக கண்ணுக்குத் தெரியாமல் இருந்து ஞானம் பார்வைக்கு தெரியும். சூட்சமமாக இருப்பதினால் அதற்கு கடவுள் நிரந்தரமான உருவம், நிரந்தரமான விளைவுகள் வைத்தார். ஞானத்திருஷ்டிக்கு குணங்கள் உருவம் தெரியும், அப்படியே அவற்றின் விளைவுகள் தெரியும். ஒரு குணம் குணசக்கர பாகம் ஒரு இடத்தில் உள்ள அதற்கு விளைவுகள் குணசக்கரம் பாகம் எல்லாம் சுற்றி இருக்கும். 12 குணங்களுக்கு வெவ்வேறான


12 விளைவுகள் குணச்சக்கர பாகம் எல்லாம் நிறைந்து இருக்கும். ஒரு ஒயரில் 100 டெலிபோன் நம்பர் போகும்போது, அவற்றின் கோடு வேறாக இருப்பதினால் ஒவ்வொன்று இணையாமல் வேறு வேறாகப் போகும் போது ஒரு குணங்கள் பாகத்தில் 12 குணம் விளைவுகள் உள்ள ஒவ்வொன்றும் இணையாமல் வேறு வேறு விளைவுகள் உள்ளது. எண்ணம் என்றால் மொழியில் உள்ள அர்த்தம். மொழி தெரிந்தால், சத்தம் கேட்டால் எண்ணங்கள் தெரியாது கேட்காது. எண்ணங்கள் மனிதனில் புத்தி மாறும்படி செய்கிறது. தெலுங்கு பாஷை ஒரு வாக்கியம் ஒரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்தும்போது அதன் எண்ணம் எப்படி வேலை செய்கிறது. உதாரணத்தைக் கவனிக்கலாம். ஒரு இடத்தில் மூன்று பேர் இருக்கிறார்கள் என்று நினைக்கலாம். மூன்று பேரில் ஒருவனிடம் தேன் இருக்கிறது. முதலில் உள்ளவன் தன்னிடம் இருந்த தேனை இரண்டாமவன் கையில் ஊற்றினான். பக்கத்தில் இருந்த மூன்றாமவன் தேனைப் பார்த்து எனக்கு (நாக்கு) என்று கேட்டான். எனக்கு சொல்லிய இரண்டாமவன் கையில் இருந்த தேனை அவன் நாக்கில் நக்கிவிட்டான். மூன்றாமவன் மறுபடியும் எனக்கு (நாக்கு) கேட்டான். அப்போதும் இரண்டாமவன் நக்கிவிட்டேன் முடிந்தது என்று சொன்னான். முதலாமவன் மூன்றாமவன் தேனைக் கேட்கிறான் என்று கவனித்து, தன்னிடம் இருந்த தேனை மூன்றாமவனுக்குக் கொஞ்சம் கொடுத்தான். இங்கு நாக்கு என்ற சத்தத்தில் உள்ள எண்ணம், இரண்டாமவனுக்கு ஒரு மாதிரி அர்த்தம் ஆனதால், முதலாமவனுக்கு வேறு மாதிரி அர்த்தம் ஆனது. மூன்றாமவன் இரண்டாவது முறை

கேட்கும்வரை முதலாமவனுக்கு சரியான எண்ணம் அர்த்தம் ஆகவில்லை. இரண்டாமவனுக்கு தேனை நாக்கில் ருசி பாரு என்று அர்த்தம் ஆனது. மூன்றாவது அவனின் நோக்கம் தனக்குக்கூட வேண்டும் என்ற அர்த்தமில் நாக்கு என்று சொல்லினான். இந்த விதங்களில் ஒரு வாக்கியத்தில் இரண்டு எண்ணங்களாக அர்த்தம் ஆனது ஆகும்! இந்த விதமான ஒரு வாக்கியத்திற்கு **4, 5** ரகமாய் எண்ணங்கள் கூட உள்ளது. ஆனால் சமய சந்தர்ப்பத்தை பொருத்து அவற்றில் சரியான அர்த்தம் கவனிக்க வேண்டும். இங்கு வாக்கியத்தில் எண்ணம் எப்படி இருக்கிறது அர்த்தமானது அல்லவா! மொழி எழுத்தில் தெரிந்த, சத்தத்தில் கேட்டால் அதில் உள்ள எண்ணங்கள் மட்டும் வெளியே பாஹிய ஞான யேந்திரியங்களுக்கு தெரியாது. தேகத்தில் உள்ளே அந்தக்கரணத்தில் உள்ள ஒன்றான புத்திக்கு மட்டும் தெரியும். ஒரு பாஷை பேசும் சத்தத்திற்கு நான்கு ஐந்து அர்த்தம் இருக்கும்போது அதில் ஏதோ ஒன்றை புத்தி மட்டும் கவனிக்கும். மூன்று பேர் தேன் இடத்தில் எனக்கு என்னும் சத்தத்தில் மூன்று விதமான அர்த்தம் ஆனது, இருந்த அர்த்தத்தில் ஏதோ ஒரு அர்த்தம் புத்தி கவனித்து ஜீவனுக்குத் தெரிவிக்கும். ஒரு வாக்கியத்தில் வேறு வேறாக நான்கு ஐந்து இருந்தால் அல்லது இரண்டு மூன்று இருந்தால், அதில் உள்ள புத்தி ஒன்று மட்டும் கவனிக்கும் தேன் விஷயத்தில் எனக்கு என்று மூன்றாவது அவன் தன் எண்ணங்களில் கேட்டது, இரண்டாவது அவன் புத்திக்கு தேனை நக்கிவிடு சொன்னதாக தெரிந்தது. இதனைப் பற்றி ஒவ்வொன்றுக்கு ஒரு விதமாக அர்த்தம் ஆனது என்று தெரிகிறது. இந்தவிதமான புத்தி ஒரு

எண்ணத்தை மட்டும் கவனிக்கும். புத்தி கவனித்த எண்ணங்களில் ஜீவன் அதில் இருந்து போவான். அதனால் கடவுள் ஞானம் கூட ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாய் அர்த்தமாவதினால் மனிதர்கள் ஒரு கடவுளின் மீது கூட வேறு வேறு எண்ணங்களில் இருக்கிறார்கள். கடவுள் அனு அனுவில் இருக்கிறார் என்று ஒருவர் சொன்னால், கடவுள் எல்லாவற்றிலும் இல்லை, அவர் ஏழாவது ஆகாசத்தில் இருக்கிறார் என்று மற்ற ஒருவர் சொல்கிறார். அவன் புத்திக்கு அப்படியே அர்த்தம் ஆகிறது. ஆனால் அவன் அதே சத்தியம் என்று சொல்கிறான். புத்தி கவனிக்கிறது ஒரு எண்ணம் மட்டும் தான் அந்த எண்ணங்கள் காண முடியாது. புத்தி கவனித்தது எண்ணம் தன் விளைவுகளினால் மனிதனில் அழுத்தம் செய்து வருகிறது. நீ மனிதனே அல்ல கடவுள் என்று வேறு ஒருவரை பற்றி சொல்லினால், அவன் அதில் உள்ள எண்ணம் கவனித்து அந்த எண்ணங்களினால் பிறந்த விளைவுகள் அழுத்தமாகி, தன்னை புகழ்ந்ததாக சந்தோசப்படுவான். மனிதன் புத்தி மொழியில் உள்ள எண்ணம் கவனிக்கும்போது அந்த எண்ணத்தில் பிறந்தது விளைவுகள். நீ மனிதன் அல்ல கடவுள் சொல்லும்போது கேட்கிறவன் கவனித்த எண்ணத்தில் ஜீவன் விளைவுக்கு பழகிய தன்னை பெரிதாக புகழ்கிறான் என்று சந்தோசப்படுவான். வேறு சந்தர்ப்பத்தில் நீ மனிதனே அல்ல என்னும் காதில் விழுந்தபோது, கடவுள் தான் என்னும் அந்த வார்த்தை கேட்கவில்லை என்று நினைத்துக் கொள்ளுங்கள். அப்போது அவர் புத்தி கிரகித்ததை பொருத்து தன்னை தூஷித்து நீ விலங்கு என்று அர்த்தம் ஆகிறது. அதன்

விளைவுகள் உடன் அந்த மனிதன் மாறிப்போய், நீ மனிதன் அல்ல சொல்லிய அவன் மீது கோபித்துக் கொண்டான். ஒரு மொழி ஒரு அர்த்தம் கொடுக்கும்போது காதினில் விழுந்த வித்தியாசம் வந்தபோது எண்ணங்களில் தொடங்கிய விளைவுகளில் மனிதன் மாறிப்போவர்கள். குருக்சேத்திர போர்க்களத்தில் தர்மராஜன் "அஸ்வத்தாமா ஹத்தம் குஞ்ஜரம்" என்று சொல்லினார். இதில் கடைசி வாக்கியத்தில் குஞ்ஜரம் என்னும் வாக்கியத்தை சொல்லும்போது சின்னதாக சத்தம் குறைவான சத்தத்தில் சொல்லும்போது, அந்த கடைசி வார்த்தை கேட்காமல் போனதினால் "அஸ்வத்தாமா ஹத்தம்" அந்த வார்த்தை கேட்ட துரோணன் அஸ்வத்தாமா தன் குமாரன் மரணம் அடைந்தான் என்று உணர்ந்து, அந்த விளைவுகளில் அசையாமல் நிராயுதபாணியாக நின்றார். போர்க்களத்தில் போர் செய்யாமல் நின்ற துரோணனின் எதிரிகள் சுலபமாக கொன்றுவிட்டார். அங்கு சொல்லியது "அஸ்வத்தாமா என்னும் யானை மரணம் அடைந்தது" அந்த வார்த்தை துரோணனுக்கு குஞ்சரஹ என்னும் அந்த வார்த்தை காதில் கேட்காமல் போனதினால் அஸ்வத்தாமா அந்த யானை என்னும் அர்த்தம் ஆகாமல் அஸ்வத்தாமா தன் மகன் மரணம் அடைந்தான் என்று நினைத்துக்கொண்டான். வெளியே வந்த சத்தம் ஞான யேந்திரமான காதுக்கு கேட்கும்போது அந்த சமாச்சாரம் மனசு உள்ளே உள்ள புத்திக்கு கொடுத்து, புத்தி அதனை கவனித்ததை ஜீவனுக்கு தெரிவிக்கும். புத்தி வெளியே எண்ணம் கவனிக்கும்போது புத்தியில் இருந்து விளைவுகள் பிறக்கிறது. புதியதாக பிறந்த எண்ணங்கள் விளைவுகள்

என்று சொல்கிறோம். பிற என்றால் பிறந்ததை ஒரு அர்த்தம் ஆகும்போது, பிற என்றால் முக்கியமானது கூட அர்த்தம் ஆகும். புத்தி கவனித்ததில் இருந்து எண்ணத்தில் இருந்து விளைவுகள் பிறக்கிறது. விளைவுகள் மனிதனில் (ஜீவனில்) மாற்றம் தெரிவித்து மனிதன் சுக துக்கங்களை அனுபவிக்க செய்து வருகிறது. எண்ணங்கள் வேறு, விளைவுகள் வேறு என்று தெரிகிறது. எண்ணங்களை விட விளைவுகள் பெரியது என்று தெரிகிறது. இப்போது உடலில் உள்ளே குணங்கள் விஷயம் வந்து பார்க்கலாம். குணங்களில் விளைவுகள் மட்டும் உள்ளது. வெளி விஷயம் காது வரை, மனசு தெரிவித்ததை புத்திக்கு சேர்ந்து புத்தி பக்கத்தில் உள்ள குணங்களில், வந்த எண்ணங்கள் தன் விளைவுகளில் சேர்கிறது. புத்தி விஷயம் எண்ணங்கள் சேர்ந்த உடனே, குணங்களே புத்திக்கு வந்ததை அதன் விளைவுகள் பொருத்து செய்து வருகிறது. அதனால் புத்தி பக்கத்தில் எண்ணங்கள் விளைவுகளாக தயாராகிறது. தேகத்தில் புத்தி ஜீவனை சுற்றி நெருங்கி ஒரு பொரையாக உள்ளது. ஜீவன் உருண்டையாக மூன்று பொரையில் உருவமாய் இருந்து மூன்று பொரை நடுவில் சூன்யமாய் இருக்கிறான். உருண்டை வடிவத்தில் உள்ள ஜீவன் குணச்சக்கரத்தில் குணங்களிடம் நிவாசிக்கிறான். ஜீவன் இருக்கும் நிலையை பார்த்தால் கீழ்க்கண்ட வரைபடத்தை பாருங்கள்.




மேலே உள்ள வரைபடத்தில் ராஜச குணங்கள் பாகத்தில் ஜீவன் இருக்கிறான். தாமச, ராஜச, சாத்வீக என்று மூன்று குணங்கள் பாகத்தில் ஒவ்வொன்றாக 12 குணங்கள் பாகம் உள்ளன. 12 குணங்கள் ஒவ்வொன்றும் விளைவுகளாய் உள்ளன. ஜீவனுக்கு ஒட்டி உள்ள புத்தி புரையில் வெளியே இருந்து வந்த விஷயம் எண்ணங்கள் சேர்ந்த உடன், அந்த எண்ணம் தகுந்த குணங்கள் வந்த எண்ணம் தன் விளைவுகளை மாற்றுகிறது. 12 குணங்கள் விளைவுகள் குண பாகம் எல்லாம் நிறைந்துள்ள, ஜீவன் அதில் உள்ளான். ஜீவன் குணங்கள் விளைவுகள் பிணைப்புள்ள வெளியில் இருந்து விஷயம் சேரும் வரை எந்த குணங்களில் விளைவுகள் ஜீவனுக்கு ஒட்டாது. விஷயம் எண்ணம் மனதில் இருந்து வந்து புத்தி சேர்ந்த உடனே, வந்த விஷயத்திற்கு சரியான குணங்கள் அதன் விளைவுகள் புத்திக்கு சேர்ந்து, புத்தி இடத்திலேயே வந்த எண்ணம் விளைவுகளாய் செய்கிறது. அப்படி சேர்ந்த விளைவுகள் காரியங்கள் நடப்பது, ஜீவனுக்கு சுகம் துக்கமாய் அடைந்து வருகிறான்.

எண்ணம் என்பது காண முடியாது என்று சொன்னோம். அப்படியே விளைவுகள் கூட காணப்படாமல் ஜீவன் புத்தி மீது, ஜீவன் மீது அழுத்தப்படும். அந்த அழுத்தம் பலமாக இருக்கும். எவ்வளவு பலமான அழுத்தத்தில் ஜீவன் மீது குணங்கள் காணப்படுகிறது என்னும் கேள்விக்கு பதிலாக குணச் சக்கரத்தில் மேலுள்ள கர்ம சக்கரத்தில் உள்ள கர்மம் பொருத்து குணங்கள் விளைவுகள் அழுத்தமான பலம் உள்ளது என்று சொல்லலாம். ஒரு விஷயம் இரண்டு பேரில் சேரும்போது அவர்ரவர் கர்மம் பற்றி குணங்கள் அழுத்தத்தில் அவர் மேல்படும். அப்படி ஒரு விஷயம் இருவர் வேறு வேறு விளைவுகள் குறியாகி வேறு வேறு அழுத்தம் பட்டு, வேறு வேறு கஷ்டங்கள் அனுபவிக்கிறார்கள். ஒரு விஷயத்தில் இருவர் சமமான கஷ்டங்களுக்கு குறியாகாமல் போவதற்கு அவற்றில் உள்ள வேறு வேறு கர்மம் தான் காரணம் என்று தெரிகிறது. இந்த விதமாக ஒரு மனிதன் கஷ்டப்பட வேண்டும் என்றால், இல்லையேல் சுகம் அனுபவிக்க வேண்டும் என்றால், அவனின் மனசுனால் விஷயம் சேர வேண்டும். சேர்ந்த விஷயம் புத்தி பக்கத்தில் குணங்கள் விளைவுகளுக்கு குறியாக வேண்டும். அந்த குணங்கள் விளைவுகள் மேல் உள்ள கர்மம் பற்றி பலத்தை வளர்த்திக்கொண்டும், ஜீவன் மேல் அழுத்தப்படுத்தும். அப்போது கர்மத்தினால் வளர்ந்த அழுத்தம் பலம் எவ்வளவு இருந்தாலும் ஜீவன் கண்டிப்பாக அனுபவிக்க வேண்டியிருக்கும். இது தேகத்தில் யாருக்கும் தெரியாமல் நடக்கும் விதானம் என்று தெரிவிக்கிறோம்.

**கேள்வி:-**எவ்வளவோ பெயர் வாங்கிய சுவாமிஜிகள், தூதர், போதிப்பவர், மதத்துக்கு சேர்ந்த பெரியோர், தூய்மையான

பணியில் உள்ளவர், ஒரு குறிக்கோள் கொண்டவர், ஞான மார்கங்களில் நற்பணி கொண்டவர் எத்தனை பேர் இருந்தாலும் அவர் எல்லாம் சொல்லாத விஷயங்கள், அவர்கள் எல்லோருக்கும் தெரியாது என்று நீங்கள் சொல்லினால் எப்படி நம்புவது?

**பதில்:-**நாங்கள் சொல்லியது கண்டிப்பாக எல்லோரும் நம்ப வேண்டும் என்று நாங்கள் எங்கும் சொல்லவில்லை. இங்கு கூட இது யாருக்கும் தெரியாத விஷயம் தெரிவிக்கிறோம் என்னும் சொல்லினோம், கண்டிப்பாக எங்கள் வார்த்தை சத்தியம் என்னும் நீங்கள் நம்ப வேண்டும் என்று நான் சொல்லவில்லை. யாராவது எங்கள் வார்த்தை நம்புவதற்கும், நம்பாமல் போவதற்கும் அவர் தேகத்தில் உள்ளே ஒரு விதானம் இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்டப்போது உள்ளே உள்ள விதானங்களை அனுசரித்து சிலர் நம்புவார்கள், சிலர் நம்பமாட்டார்கள் என்று தெரியும். உங்களுக்கு முழுமையாக அர்த்தமாகும்படி அந்த விதானங்கள் தெரிவிக்கிறோம் பாருங்கள். இதற்கு முன்பே வெளியில் உள்ள விஷயங்கள் தேகத்தில் உள்ளே ஜீவனில் பக்கத்தில் உள்ள புத்திக்கு சேரும் என்று சொன்னோம். அப்படியே இப்பவும் கிரந்த உருத்தில் சொல்லிய விஷயங்கள் படித்த ஒவ்வொருவருக்கும் தேகத்தில் உள்ளே புத்திக்கு சேரும். ஆனால் உள்ளே சேரும் விஷயமில் முதலாவதாக நாம் இரண்டாக பிரித்துக்கொள்ள வேண்டும். ஒன்று வெளி உலக விஷயம், இரண்டாவது பரமாத்மா விஷயம். உலக விஷயம் உள்ளே சேர்ந்தால், இதற்கு முன் நாம் சொல்லிய புத்திக்கு சேர்ந்தவுடன், குணங்கள்

விளைவுகள் மாறுவது, அது கூட கர்மத்தில் உள்ளபடி நடக்கிறது என்று தெரிந்து கொண்டோம். இங்கு உள்ளே சேர்ந்த உலகவிஷயங்களை நம்ப வேண்டும், இல்லை என்ற நிர்ணயம் கர்ம பிரகாரமே இருக்கும். உள்ளே உள்ள கர்மத்தை பற்றிய இந்த விஷயம் நம்புவது நம்பாமல் போவது நடக்கிறது. கண்டிப்பாக நம்புவான் என்னும், நம்பாமல் போவான் என்னும் சொல்ல முடியாது. அது அவர் அவர் கர்மத்தில் உள்ளபடி இருக்கும். இனி கடவுள் விஷயம் பற்றி சொல்லினால், ஆன்மிகம் விஷயம் எல்லாம் மனசோடு உள்ளே போகவேண்டியது இருக்கும். உலகம் விஷயம் தேகத்தில் உள்ளே ஜீவனுக்கு சேர்ந்ததே பரமாத்மா விஷயம் கூட உள்ளே ஜீவனுக்கு சேரவேண்டும். ஒரு ஆன்மிக (ஆத்மாவுக்கு சம்மந்தப்பட்ட) விஷயம் காதில் கேட்டால், இல்லை, கண்ணுக்குத் தெரிந்ததை படித்தால் உள்ளே சேர்ந்த கண், காது பக்கத்தில் உள்ள மனசு அந்த விஷயத்தை உள்ளே ஜீவனின் பக்கத்தில் உள்ள புத்திக்கு சேரும். புத்திக்கு சேர்ந்த விஷயம் ஜீவனுக்கு சேர்ந்ததாகும். சேர்ந்த விஷயம் தெய்வ சம்மந்தமான ஞானம் ஆனதினால் அங்கே கடவுள் ஞானம் விஷயம் மீது கர்மம் வேலை செய்யாது. ஆனால் குணங்களின் விளைவுகள் ஞான விஷயம் மேல் இருக்காது. உலகத்தில் உள்ள விஷயங்களாக இருந்தால் அது கர்மத்தில் இருந்தபடி குணங்கள் விளைவுகளில் மூழ்கி, கர்மம் பிரகாரம் நம்புவது நம்பாமல் போவது நடக்கும். இங்கு ஞான விஷயமானதினால் கர்மத்துக்கு சம்மந்தம் இல்லாதது ஞானம், ஆனால் கர்மம் எந்த அளவுக்கு ஞான விஷயம் மீது வேலை செய்யாமல்

போவதினால், கர்மத்தை அனுசரித்து உள்ள குணங்கள் கூட வேலை செய்கிறது. அதனால் ஞானம் விஷயம் சம்மந்தமாக மனிதனில் உள்ள ஆர்வம் மட்டும் வேலை செய்யும். உள்ளே சேர்ந்த ஞானம் விஷயம் அவன் ஆர்வம் பற்றி நம்புவது, நம்பாமல் போவது நடக்கும். **"ஸ்ரத்தவான் லப்பித்தே ஞானம்"** என்னும் பகவத்கீதை வாக்கியப் பிரகாரம் தெய்வ ஞானம் மீது ஆர்வம் இருந்தால் அவன் ஆர்வம் பற்றி நம்புவது நடக்கும். முழுமையாக ஆர்வம் இருந்தால் தெரிந்த விஷயம் மீது முழுமையான விஸ்வாசம் ஏற்படும். குறைவான ஆர்வம் இருந்தால் குறைவாக விஸ்வாசம் இருக்கும். முழுமையாக ஆர்வம் இல்லாமல் போனால் அவன் தெரிந்த ஞானம் விஷயமும் நம்பாமல் விட்டுவிடுவான். அதனால் ஆர்வம் இல்லாதவனுக்கு ஞானம் கிடைக்காது என்று பெரியவர்கள் சொல்லியதாகும். ஆர்வம் பொருத்து ஞானம், இப்போது நாங்கள் சொல்லிய விஷயம் கூட உங்களுக்கு உள்ளே சேர்ந்து, அது உங்கள் ஆர்வம் பொருத்து நம்புவது, நம்பாமல் போவது நடக்கும். இது எல்லாம் தெரிந்த நான் உங்களை நம்புங்கள் என்று எப்படி சொல்லுவது? உங்கள் ஆர்வம் பொருத்து, என் ஞானம் நீங்கள் நம்புவது, நம்பாமல் போவது நடக்கும். அப்படி என்றால் வெளி மனிதர்கள், தூதர்கள், சுவாமிஜிக்கள் சொல்லியதை நம்புவீர்கள் என்று சொல்ல முடியாது.

**கேள்வி:-**குணங்கள் குணச்சக்கரத்தில் ஆடாமல் அசையாமல் இருந்தால், அவற்றின் விளைவுகள் குணச்சக்கரத்தில் உள்ளே எல்லாம் பரவி, வெளியில் இருந்து வந்த விஷயம் புத்திக்கு

சேர்ந்த உடன் அங்கே தேவையான குணங்களில் விளைவுகள் ஏற்படுகிறது, அது அவர் கர்மம் பொருத்து எந்த அளவுக்கு கர்மம் இருந்தால் அவ்வளவு பலமான விளைவுகள் ஜீவன் மீது அழுத்தம் ஏற்படும் என்று சொன்னீர்கள். ஜீவன் மீது குணங்களின் அழுத்தம் இருக்கிறதா? அல்லது கர்மம் அழுத்தம் இருக்கிறதா?

**பதில்:**-மனிதன் அனுபவிக்க வேண்டியது ஏதாவது கர்மம் காரணத்தினால் அனுபவிக்க வேண்டும். ஆனால் அந்த அனுபவம் எல்லாம் குணங்கள் மீது அழுத்தப்படுத்தி உள்ளது ஆகும். கர்மம் யார் மேல் நேராக அழுத்தம் செய்யாது. மனிதன் மேல் குணங்கள் அழுத்தம் தவிர கர்ம அழுத்தம் இருக்காது. அதனால் யார் தன் எந்த குணங்களினால் கஷ்டம் அனுபவிக்கிறான் என்றும் தெரிந்துகொள்வான், தான் எந்த கர்மத்தினால் கஷ்டப்படுகிறான் என்று சொல்ல முடியாது. கஷ்டத்துக்கு பின்னால் கர்மம் தான் காரணம் ஆனால் அது எந்த கர்மமோ, எப்படிப்பட்ட கர்மமோ என்று யாருக்கும் தெரியாது. மனிதன் அனுபவித்த ஒவ்வொரு கஷ்டமும் தனக்கு எந்த குணங்களினால் வந்ததை சொல்வான். அதனால் அனுபவித்த ஒவ்வொன்றுக்கும் கர்மம் காரணமாய் இருந்தால், அது நேராக மனிதன் மீது விழுந்து பாதிப்பு செய்யாமல், குணங்கள் விளைவுகள் உபயோகித்து மனிதனை கஷ்டப்படுத்துகிறது. ஒவ்வொரு மனிதனில் அப்படியே நடக்கிறது. மேலும் மனிதன் மீது குணங்கள் அழுத்தம் தவிர கர்ம அழுத்தம் இல்லை என்று தெரிகிறது. மற்றும் குணங்கள் விளைவுக்கு பலம் கர்மத்தினால் நடக்கிறது என்று சொல்லலாம். கர்மம்

எவ்வளவு பலமாக இருந்தால் அந்த அளவுக்கு குணங்கள் விளைவுகள் வளரும்.

**கேள்வி:-**கர்மத்தை பொறுத்து குணங்கள் விளைவுகள் வளரும் என்று சொல்கிறீர்கள் அல்லவா! கர்மம் எவ்வளவு இருந்தால் குணங்கள் அவ்வளவு வளர்ந்தால் சொல்வதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? கர்மத்தை பற்றி குணங்களுடன் விளைவுகள் வளரும் என்னும் சொல்வதற்கு சாஸ்திரம் ஆதாரம் இருக்கிறதா?

**பதில்:-**சுகமானாலும், கஷ்டமானாலும் மனிதன் அனுபவிக்கும்போது அதற்கு காரணம் கர்மமேயானதினால், அந்தக் கர்மம் என்னவோ யாருக்கும் தெரியாது. சிலருக்கு கஷ்டம் சுகத்திற்கு கர்மம் தான் காரணம் என்ற விஷயம் கூட தெரியாது. சிலருக்கு ஒவ்வொரு வேலைக்கும், ஒவ்வொரு சுகத்திற்கு, ஒவ்வொரு துக்கத்திற்கு கர்மம் காரணம் என்னும் தெரிந்தால், அவருக்கு நடந்த வேலையில், அனுபவிக்கின்ற கஷ்டத்தில் குணங்களே தெரிகிறது என்றும், கர்மம் யாரும் காண முடியாது. அதனால் எவ்வளவு கர்மத்திற்கு எவ்வளவு சுகமும் எவ்வளவு கஷ்டத்திற்கு வார்த்தை இல்லாமல் போனது. குணங்கள் பொறுத்து வேலை, குணங்கள் பொறுத்து கஷ்டம் சுகம் இருக்கும் என்று பலபேருக்கு அர்த்தம் ஆனது. ஆனால் பிரம்மவித்ய சாஸ்திரம் பிரகாரம் (தர்மசாஸ்திரம் பிரகாரம்) ஒரு குணங்களுக்கு ஒரு கர்மம் என்னும் சூத்திரத்தை அனுசரித்து குணங்கள் பின்னால் கர்மம் இருக்கிறது என்று தெரிகிறது. கர்மம் பற்றிய விவரமும் தெரிய வேண்டும் என்றால் கர்ம சக்கரம் பற்றி தெரிய

வேண்டும். கர்ம சக்கரத்தில் உள்ள கர்மமும் குணங்கள் பற்றியே ஏற்படும். நல்ல குணங்கள் பற்றி நல்ல கர்மம் புண்ணியம், கெட்ட குணங்கள் பற்றி கெட்ட கர்மம் பாவம் ஏற்பட்டு கர்ம சக்கரத்தில் நின்று இருக்கும். அப்படி நின்று உள்ள கர்மம் காரணத்தினால் குணங்களின் விளைவுகள் வளர்கிறது. அதனால் கர்மத்தினால் குணங்கள், குணங்களினால் கர்மமும் ஒவ்வொன்றும் இணைந்த சம்மந்தம் என்று சொல்லலாம். கர்மம் முதலாவதா, குணங்கள் முதலாவதா என்று சொல்லுவதற்கு கூட முடியாத நிலைமையிலிருந்தால் வித்தியாசம் தெரிவதற்கு கர்மம் முதலில் எடுத்துக்கொண்டு மேலே கர்மசக்கரத்தில் இருந்து பரிசோதனை ஆரம்பிக்க வேண்டும். கர்மசக்கரத்தை ஞானபார்வையில் பார்த்தால் கர்மசக்கரம் 12 பாகமாய் உள்ளது. 12 பாகமாய் பிரிந்து இருக்கும் கர்மசக்கரத்தில் முக்கியமான கர்மம் 12 இருக்கிறது. மனிதன் பிறந்தது முதல் இறந்து போகும்வரை மனிதனுக்கு ஜீவிதம் (வாழ்க்கை) 12 கர்மமே சாசனமாய் நடத்துகிறது. அப்படிப்பட்ட 12 கர்மங்களும் கர்மசக்கரத்தில் 12 பாகத்தில் உள்ளது ஒவ்வொரு பாகத்தில் ஒவ்வொரு கர்மம் நின்று இருக்கிறது. ஒவ்வொரு பாகத்தில் உள்ள ஒவ்வொரு கர்மமும் 9 பாகம் பிரிந்து உள்ளது. ஒவ்வொரு கர்மம் 9 பாகத்தில் 12 குணங்களில் 12x9=108 கர்மமாக பிரிந்து போனது. கீழ் உள்ள குணங்கள் சக்கரத்தில் ஒவ்வொரு பாகமாய் 12 குணங்கள் இருக்கிறது. 12 குணங்கள் கூட ஒவ்வொன்று 9 பாகமாய் பிரிந்து உள்ளது. இந்த விதமான 12 குணங்கள் மொத்தம் 12x9=108 குணங்களாய் பிரிந்து உள்ளது. மேல்

உள்ள கர்ம சக்கரத்தில் 12 பாகத்தில் கர்மம் 108 வகையாய் பிரிந்து அதே விதமாய் கீழ் உள்ள குணசக்கரத்தில் 12 குணங்களும் 108 வகையாய் பிரிந்து உள்ளது. மேல் உள்ள கர்ம சக்கரத்தில் கர்மங்கள், கீழ் உள்ள குணசக்கரத்தில் குணங்களும் இரண்டும் சமானமாய் பிரிந்துள்ளது என்று தெரிகிறது. மனிதன் தேகத்தில் உள்ளே வெளி விஷயம் காதில் சத்தம் கொடுப்பதின் வழியாக, கண் வழியாக, படிப்பதினால், தேகத்தில் உள்ளே போகும்போது தேகத்தில் ஞானயேந்திரம் வரை பரவி இருந்த மனசு அந்த விஷயம் கவனித்து தலையில் உள்ள புத்திக்கு சேர்கிறது. புத்திக்கு விஷயம் சேர்ந்தவுடன் அதற்கு சம்பந்தப்பட்ட குணங்கள் விளைவுகள் கர்மத்தினால் உள்ளதை புத்திக்குச் சேரும். உதாரணத்திற்கு ஒரு வியாபாரம் விஷயம் பற்றி கேட்கும் போது அந்த விஷயம் மனம் வழியாக புத்திக்கு சேரும்போது அதற்கு சம்மந்தப்பட்ட குணங்களும் ஆசை (காமம்) ஆனதினால் வியாபாரம் விஷயத்தில் லாபத்திற்கு சம்மந்தப்பட்ட விஷயம் ஆனதினால், ஆசை என்ற குணங்களும் 9 பாகத்தில் பெரிய குணங்கள் உள்ள விளைவுகள் புத்தி மீது அழுத்தப்படுகிறது. இங்கு முக்கியமாக தெரிவது என்னவென்றால்! அங்கு புத்திக்கு சேர்ந்த குணங்கள் ஏதாவது அதனை 12 மடங்காய் பெருக்கி வந்த முழுமையான பலம் புத்தி மேல் அழுத்தப்படுத்துவது என்று சொல்லலாம். புத்திக்கு அழுத்தப்படுத்தியது அதனை நெருங்கி உள்ள ஜீவனுக்கு அழுத்தப்படுத்தியது என்று தெரிகிறது. 9 ஆசையில் பெரிய ஆசை அந்த விஷயம் சேர்ந்த விளைவுகள் காண்பித்து, அந்தவிளைவுகள் 12 முறை

அதிகமாக மாறி ஜீவன்மீது அழுத்தப்படுகிறது. புத்திக்கு நெருங்கிய எந்த குணங்களும் மேலுள்ள கர்மத்தை பொருத்து 12 முறை பெருக்கி எவ்வளவு பலம் ஜீவன் மீது அழுத்தப்டுகிறது. 12 முறையாக பெருக்கியதினால் அங்கு சேர்ந்த ஆசை என்ற எண்ணங்கள் அசை குணங்கள் என்று சொல்கிறோம். பெருக்கப்பட்டதை குணங்கள் என்று பெயராக உள்ளது. 108-ஆக பிரிந்து இருந்த ஒவ்வொரு குணங்கள் புத்திக்கு சேர்ந்தபோது தனக்கு உள்ள விளைவுகள் 12 முறையாய் பெருக்கி ஒவ்வொரு எண்ணங்கள் குணங்கள் என்று சொல்கிறோம். ஒவ்வொரு குணங்களும் தனக்குள்ள விளைவுகளுடன் 12 முறை பெருக்கிக் கொண்டு ஜீவன் மீது அழுத்தப்படுத்தி, 108 குணங்களில் எந்த குணங்களினால் வந்த பாவம் மற்றும் புண்ணியமான 108 கர்மமாக மாறி கர்மசக்கரத்தில் சேர்ந்து விடுகிறது. கர்மசக்கரத்தில் உள்ள 108 கர்மங்கள் கீழ் உள்ள குணச்சக்கரத்தில் உள்ள 108 குணங்களினால் ஏற்படுகிறது என்று தெரிகிறது. குணசக்கரத்தில் உள்ள ஆசை என்னும் குணங்கள் 9 பாகமாய் பிரிந்து பெரிய குணங்களில் இருந்து சின்ன குணங்கள் வரை அளவு உள்ளது என்று சொல்கிறோம். ஒரு குணங்கள் ஒன்பது பாகமாய் பிரிந்தபோது கடைசியில் உள்ள சின்ன குணங்களுக்கு இரண்டு முறை பெரியதாக 8 குணங்கள் இருந்த, 8-ஆவதர்க்கு இரண்டு முறைபெரியதாக 7 குணங்கள் இருக்கும். அதே விதமாக 7 இரண்டு முறை பெரியதாக 6 குணங்கள் இருக்கும். இப்படி ஒவ்வொன்றாக இரண்டு முறை பெரியதாக இருந்த கடைசியில் பெரிய குணங்கள் தயாராக உள்ளது. உங்களுக்கு நன்றாக

அர்த்தம் ஆவதற்கு கணித ரூபத்தில் விவரிக்கின்றேன் பாருங்கள். சின்ன குணங்களில் இருந்து பெரிய குணங்கள்வரை எப்படி நடக்கிறதோ கணக்கில் விவரிக்கிறேன் பாருங்கள். இது உதாரணம் மாத்திரம் என்று தெரிவிக்கிறோம். ஒரு தப்பை (மூங்கில் கோல்) வெட்டி துண்டாக இருப்பதை தப்பை என்று சொல்கிறோம். தப்பையைவளைத்தால் அவ்வளவு பலமாய் திரும்பி பின்னாடி வந்ததை அதனை 1-ஆவது தப்பை பலம் என்று சொல்கிறோம். ஆசை கடைசியில் சின்ன குணங்கள் ஒரு தப்பை என்னும் அளவு பலமாய் இருக்கிறது, **2**-ஆவது தப்பை என்னும் அளவு, பலமாய் இருக்கிறது. **3**-ஆவது ஆசை **4**-ஆவது தப்பை அளவு மற்றும் பலமாக உள்ளது. **4** குணங்கள் **8**-ஆவது தப்பை அளவு, பலமாய் இருக்கிறது. அப்படியே **5** குணங்கள் **16**-ஆவது தப்பை பலமாய், அளவு இருக்கிறது. **6**-ஆவது ஆசை என்னும் குணங்கள் **32** மடங்கு தப்பை பலம், அளவாக இருக்கிறது. அப்படியே **7** ஆசை என்னும் குணங்கள் **64** மடங்கு தப்பை அளவு பலமாய் இருக்கிறது. **8**-ஆவது ஆசை என்னும் குணங்கள் **128**-ஆவது தப்பை அளவில் பலமாய் இருக்கிறது. கடைசியில் பெரியதான ஆசை என்னும் குணங்கள் **256** தப்பை அளவி பலமாய் இருக்கிறது. இந்தவிதமான ஆசை என்னும் **9** குணங்கள் அளவு சிறியதில் இருந்து பெரியது வரை எப்படி இருக்கிறது என்னும் பார்த்தால் சிறியது ஒரு தப்பை கனமாக, ஒரு தப்பை பலம் உடன் இருக்கிறது. சின்ன ஆசையில் இருந்து கடைசி பெரிய ஆசை வரை பார்த்தால் கடைசியில் பெரிய ஆசை **256** ஆவது தப்பை கனமாக

பலமாகத் தெரிகிறது. ஆசை (காமம்) என்னும் குணங்கள் எப்படி 9 பாகமாய் உள்ள கனமான, பலமில் எப்படி உள்ளதோ அப்படி மிகுந்த 11 குணங்கள் அளவு, பலமில் ஆசை என்னும் குணங்கள் இருக்கிறது. 12 குணங்கள் ஒவ்வொன்றும் 9 பாகமாய் இருந்து மொத்தம் 108 ஆக பிரிந்துள்ளது. விஷயம் எண்ணங்கள் உடன் புத்தி சேர்ந்தபோது அது குணங்கள் விளைவுகளாய் மாறிப்போகும். அப்படி மாறிப்போனது மேல் உள்ள கர்மம் பொருத்து இருக்கும். கர்மம் எத்தனாவது பாகமாய் உள்ளதோ அவ்வளவு பிரிந்த குணங்கள் புத்தியை ஒட்டிக் கொண்டு அது 12 மடங்கு பெருக்கி முழுமையாக குணங்கள் விளைவுகளாக மாறிப்போகும். இந்த விதமாக கர்மத்தில் உள்ள 9 பாகத்தில் எது உள்ளதோ அதற்கு சரியாக சேர்ந்த 9 குணங்கள் பாகத்தில் ஒரு குணங்களில் புத்தி சேர்ந்து அது 12 மடங்கு பெருக்கியதினால் குணங்கள் என்னும் பெயர் பெருக்குதல் என்னும் அர்த்தம் கொடுக்கிறது என்று தெரிகிறது. எப்படி ஒவ்வொரு நாள் ஒவ்வொரு விஷயத்தில் மனிதன் தேகத்தில் கர்ம பாகத்தின் குண பாகம் வரும்போது, அது 12 மடங்காய் பெருக்கி புத்திக்கு நெருங்கிய கடைசியில் ஜீவன் மீது அழுத்தம் ஆகிறது. தேகத்தில் உள்ள புண்ணியகர்மம், பாவகர்மம், குணங்களுடன் மனிதனின் மீது அழுத்தம் நடந்துவருகிறது. புண்ணிய கர்மம் 6 நல்ல குணங்களில் பிரிந்து போன 54 குணபாகத்தில் ஒன்று பிரிந்த குணங்களினால் தூண்டப்பட்டு புத்தியிடம் நெருங்க செய்துவருகிறது. அப்படி புத்தி சேர்ந்த குணங்கள் விளைவுகள் 12 மடங்கு பெருக்கி அவ்வளவு

பலமாய் ஜீவன் மீது சுகம் என்னும் அழுத்தம் வருகிறது. அப்போது ஜீவன் சுகம் என்னும் அழுத்தம் நன்றாக அனுபவிக்கிறான். அப்படியே சில விஷயத்தில் பாவ குணங்கள் வரும்போது கடைசியில் பெருக்கி புத்தியில் இருந்து ஜீவன் மீது அழுத்தம் கொண்டு ஜீவன் கஷ்டம் இல்லை என்னும் கவலை என்ற அழுத்தம் அடைகிறான். இந்தவிதமாக கர்மத்தினால் அனுபவிப்பதில் குணங்கள் பாத்திரம் முக்கியமாக உள்ளது. **108** பாகமாய் உள்ள **12** குணங்கள் **12** முறை பெருக்கி **12** மடங்காய் குணங்கள் விளைவுகள் காண்பித்து கர்மத்தை அனுபவிக்கச் செய்கிறது. குணசக்கரத்தில் ஒரு குண பாகத்தில் **12** குணங்கள் பாகம் உள்ளது. மூன்று குணங்கள் பாகம் மொத்தம் **36** குணங்கள் உடன் அவற்றின் எல்லா விளைவுகளை மாயை என்னும் பெயரில் குறிப்பிடுகிறோம். மாயை என்னும் குணங்கள் விளைவுகள் யாரும் ஜெயிக்க முடியாது என்று **“ம ம மாய துரத்யயா”** என்று கீதையில் கூட சொல்லினார். கடவுள் மனிதனாக **(பகவானாக)** பிறந்த அவர் தேகத்தில் கூட குணங்கள் இருப்பதினால் மாயை என்னும் குணங்கள் விளைவுகள் பகவான் மீது கூட இருக்கும் என்று தெரிவிப்பதற்கு தேவாலையங்களில் சாகார பிரதிமையாக உள்ள பகவான் பிரதிமையை சுற்றி மாயை ஆவகித்து உள்ளதுப்போல் சிங்கதலையாட்டம் வைத்து இருப்பார்கள். சிங்க தலையாட்டம் **“பிரபாவளி”** என்னும் பெயரில் கூட கூப்பிடுவார்கள். மாயை விளைவுகளை தெரிவித்ததற்கான சிங்க தலையாட்டம் பிரபாவளி என்று சொல்லுவது நடக்கின்றது. மாயை ஆனது குணங்கள் விளைவுகள்

யாரையும், எப்படிப்பட்டவர்களையும் விடாது. மாயை, கடவுள் பகவானாக மனிதன் உருவத்தில் வந்தால் அவர்களையும் தன் விளைவுகளுக்கு உள்ளே இருக்கும் படி செய்வேன் என்னும் தேவாலையத்தில் பிரபாவளி என்னும் பெயரில் சிங்க தலையாட்டம் தெரியும் படி, நான் ஞான மார்கத்தில் உள்ளேன் என்ற அவரைக்கூட, நான் சுவாமிஜி என்றவர்க்குக்கூட விடாமல் சின்னதாக அஞ்ஞானம் வழியில் போகும்படி செய்து கடவுளை தெரியாமல் செய்து வருகிறது. யார் யாராவது உண்மையான கடவுளை அனுசரித்து அவர் தர்மயுத்தமான முழுமையாக நம்புபவனை அப்படிப்பட்ட அவனை மாயை ஒன்றும் செய்யாது, அப்படி ஆகாமல் சிறிது அதர்மமாக பேசினால் மாயை தன் குணங்கள் விளைவுகளுக்கு மனிதனை குறித்து அஞ்ஞானம் வழியில் அனுப்பும். பூமி மீது பிறந்த எந்த மனிதனாலும் குணங்கள் உருவத்தில் உள்ள மாயை கடவுள் வழியில் போகாமல் செய்கிறது. மனிதன் ஒரு கல்வி பயிற்சியில் ஒரு வித்தையை பழகி, ஒரு தேர்வு பெற்று அவர் இந்த வித்தையை தெரிவித்தவன் அடையாளம் கண்டு 12 பாடங்கள் முழுமையாக பழகி 12 பாடங்களை பரிட்சை எழுதி அவற்றில் தேர்வு பெற வேண்டியது இருக்கும். ஒரு பாடத்தில் மதிப்பெண் குறைவாக வந்தால் அவர் அந்த வித்தையை பழகிய பெருமையும், புகழும் வராது. கடைசியில் அவரை கல்வியாளர் என்னும் குறிப்பிடுவதற்கு எப்படி சுற்றியும் அவரிடம் உள்ள எல்லா பாடங்களில் பரிட்சையில் தேர்வு பெற்று தான் ஆகவேண்டும். கல்வியாளர் ஆவதற்கு பரிட்சையில் எப்படி இருக்குமோ, அப்படியே மனிதன்

முழுமையாக ஞானம் பெறுவதற்கு மாயை என்னும் பரிட்சையில் தேர்வு பெற வேண்டும். ஆனால் கடவுள் மீது தெளிவாக விசுவாசம் இல்லாதவன் தர்மங்களை அனுசரித்து நடக்காதவனை மாயை விளைவுகளுக்கு அடிமையாகி மாயை ஜெயிக்காமல் குணங்களை ஜெயிக்காமல் மாயையில் சிக்கிக்கொண்டு போவான். பிரம்மவித்தியாசாஸ்திரம் விட்டு யார் பேசினால், தர்மசாஸ்திரம் என்னமோ தெரியாமல் தனக்கு இஷ்டம் வந்தபடி யார் பேசினால், உலகத்தில் உள்ள லாபத்திற்கு பிரம்மவித்தயை யார் உபயோகித்தாலும் அவன் எப்போதும் மாயை தாண்ட முடியாது. பூமி மீது எவ்வளவு பெயர் சம்பாதித்துக் கொண்டாலும் ஞானியைக்கூட மாயை விடாது. தெய்வ பார்வையில் சொல்லினால் தெய்வ தர்மங்களை அத்து மீறி போகாதவன் அனுசரிக்கின்றவன் மட்டும் மாயை தாண்டி தெய்வமில் சேருவான். இயற்கை **(பிரக்ருதி)**, சக்தி மாயை சக்தியாக இருக்கும்போது, மாயை சக்தி குணங்கள் சக்தியாக உள்ளது. 12 குணங்கள் சக்தி ஜீவனை கடவுள் வழியில் போகாமல் செய்கிறது. மாயை என்பது கடவுளுக்கு எதிரியானதா என்றும் சொல்லினால் அப்படி கூட அல்ல. மாயை தயாரித்தவர் கடவுள். தெய்வ நிர்மானமான மாயை கடவுள் தன் கிரந்தத்தில் பகவத்கீதையில் **"என் மாயை"** என்னும் அர்த்தமாகும் படி **"மமாமாய"** என்று சொல்லினார். கடவுளுக்கு யார் இஷ்டமாக இருப்பானோ அவனை இயற்கை சக்தியான மாயை தன் தடங்கல் இல்லாமல் செய்து தெய்வ வழியில் முன்னுக்கு போகும்படி செய்யும். அப்படியே கடவுளுக்கு இஷ்டம் இல்லாத வேலையை யார் செய்தாலும் அப்படிப்பட்ட அவனை

மாயை தன்னை ஞானத்தில் இருந்ததுப்போல் பிரமிக்க வைத்து கடவுளுக்கு தூரமாக அனுப்பும். மாயை பற்றி, மாயை மனிதனில் மறைத்து அதனைப் பற்றி, மாயை விதானம் பற்றி யாரும் சொல்லவில்லை, மாயை பற்றி முழுமையாக யாருக்கும் தெரியாது. அதனால் மாயை மனிதனில் எல்லாவித தடங்கல் செய்து கடவுள் வழியில் போகாமல் செய்கிறது. கடவுள் வழியில் போகும் படி பிரமிக்க செய்து கடவுளுக்கு தூரமாய் அனுப்புகிறது. தெய்வ வழியில் கவனமாக இல்லாமல் போனால் என்னையும் மாயை விடாது. அதனால் எப்போதும் ஜாக்கிரதையாக இருப்பதற்கு நான் முயற்சி செய்கிறேன். இப்போது வரை எனக்குத் தெரிந்த எல்லாம் மாயைப் பற்றி சொன்னேன். மாயையைப் பிரித்து பார்த்தால் அது குணங்கள் உருவத்தில் உள்ளது. ஒவ்வொரு மனிதனில் தேகத்தில் 12 குணங்கள் உருவத்தில் உள்ள மாயை தன் குணங்கள் மூலம் ஒவ்வொரு மனிதர்களை நடத்துகிறது. மாயையைப் பற்றி விவரித்தால் அது குணங்களாக உள்ளது என்று சொல்லி உள்ளோம்! குணங்களாக உள்ள மாயை அனைத்தும் மனிதன் மீது விளைவுகள் காட்டாது. ஒரு சமயத்தில், ஒரு விஷயத்தில், ஒரு குணத்தில் மனிதனை கர்மம் அனுபவிக்கும் படி செய்கிறது. கர்மத்தில் சிக்கிக் கொண்டதுப்போல் செய்கிறது. 108 குணம் பிரிவுகள் ஒரு சமயத்தில் ஒரு பிரிவு வேலை செய்ததினால் அது 12 பாகம் பலம் இணைந்த மனிதனை கர்மத்தில் சிக்கிக்கொண்டு செய்து கடவுள் வழியில் போகாமல் செய்கிறது.

**கேள்வி:-**அவ்வளவு பலமான மாயையை ஜெயிப்பதற்கு ஏதாவது மார்கம் இருக்கிறதா? மனிதன் எந்த மார்கம் அனுசரித்தால் மாயையைத் தாண்டி கடவுள் வழியில் போக முடியுமா?

**பதில்:-**இதற்கு முன் கொஞ்சம் சொல்லினோம். பிரம்மவித்ய சாஸ்திரத்தை அத்து மீறி யார் முயற்சி செய்தாலும், தர்மசாஸ்திரம் தெரியாமல் உண்மையான கடவுளை நாங்கள் ஆராதனை செய்கிறோம் என்னும் யார் நினைத்தாலும், பிரம்மவித்யாவை வெளி உலகம் லாபத்திற்கு யார் உபயோகித்துக் கொண்டாலும் அவர் மாயையை ஜெயிக்க முடியாது என்று சொல்லினோம். இப்படிப்பட்ட அவரை குணங்கள் பிரமிக்கச் செய்து தன்னுடையது சரியான மார்கம் என்னும் செய்து கடவுள் வழியில் வராமல் செய்கிறது. எவ்வளவோ பலமான மாயையை ஜெயிப்பதற்கு கடவுள் கொஞ்சம் உபாயம் கூட சொல்லினார். அந்த உபாயம் தெய்வ கிரந்தங்களான பகவத்கீதை, பைபிள், குரான் கிரந்தங்களில் இருக்கிறது.

**கேள்வி:-**அந்த மூன்று கிரந்தங்களில் பெருமையாக வைத்தவர் கூட முக்கியமாக அவர் மதத்தை பெருமையாக சொல்லிக்கொள்ளுவது என்னும் முதன்மையான மாயையில் விழுந்துவிட்டார்கள். நாங்கள் அந்த கிரந்தங்களை படித்தால் அதில் மாயை ஜெயிக்க உபாயம் இருந்தாலும் அது எங்களுக்கு அர்த்தம் ஆகவில்லை. குருவாக இருந்த சிலர் பெரியவரிடம், சுவாமிஜிகளிடம் போய் மாயையை ஜெயிக்கும் உபாயம் சொல்லுங்கள் என்று கேட்டால், பகவத்கீதையில்

விஸ்வரூபசந்தர்சனயோகம் **48, 53** சுலோகத்தில் எந்த காரியங்களினால் கடவுள் தெரியாமல் போவாரோ அந்த காரியம் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். கடவுள் இது தன் தர்மங்கள் அல்ல என்னும் எதை சொல்லினாரோ, அவற்றினை சிலர் போதிக்கிறார்கள். இது எல்லாம் பார்த்தால் கடவுள் சேரும் வழி எங்களுக்கு கிடைக்குமா என்று சந்தேகம் வருகிறது. இது வரை எத்தனையோ விஷயம் விவரித்து சொல்லிய நீங்கள் எங்களுக்கு அர்த்தமாகும் படி உபாயம் சொல்வீர்கள் என்று வேண்டிக் கொள்கிறோம்.

**பதில்:-** உன் கோரிக்கை நல்லதே தான், உன் கோரிக்கை தீர்ப்பதற்கு எனக்கு அருகதை இருக்கிறது என்று நான் நினைக்கவில்லை. எதற்காக என்றால்! நான் பிறந்ததில் இருந்து எந்த நாளில் நான் கடவுள் ஞானத்தை தெரிந்து கொள்ளவில்லை. வாழ்க்கை வாழ்வதற்காக காலம் எல்லாம் ஆகியது. நான் பிறந்தது ஏழை குடும்பத்தில், மேலும் அதனால் ஆஹாரத்தை தேடுவதற்கே காலம் கடந்தது. அதனால் யாராவது என்னை வேதங்கள் படித்தாயா என்று கேட்டால், உபநிஷத்துகள் படித்தாயா என்று கேட்டால், இல்லை என்று சொல்லினோம். வேதங்கள் உபநிஷத்துகள் படிக்காத நான் சொல்லும் ஞானம் சரியானது அல்ல என்று எத்தனையோ பேர் பண்டிதர்கள் சொல்லினார்கள். நான் சொல்லும் ஞானம் மீது சில பேருக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் என் ஞானம் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. எதற்காக என்றால்! எனக்கு என் உள்ளே இருந்த ஆத்மா போதித்த விஷயம் அசத்தியம் அல்ல என்று தைரியமாக சொல்கிறேன். நான் சொல்லும் ஞானம் எனக்கு

பெருமையாகயிருந்தாலும் வெளியே உங்களுக்கு பெருமையாக உள்ளதோ இல்லையோ, உனக்கு என் ஞானம் மீது நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லுங்கள் என்றால் சொல்வேன்.

**கேள்வி:-**பூமி மீது தெய்வ ஞானம் போதிப்பவர் எத்தனை பேர் உள்ளர்கள். அவர் முக்கியமாக அவர் கடவுள் பற்றி, அவர் கிரந்தம் பற்றி, அவர் மதம் பற்றி, அவர் ஆராதனைப் பற்றி சொல்கிறார்கள். அதனால் ஒரு மதம் மற்றொரு ஒரு மதம், ஒரு ஞானம், மற்றொரு ஒரு ஞானம் கண்டிக்கிறது. அப்படிப்பட்டப்போது ஒன்று சரியானது என்றால் மற்றொன்று தவறான பிழை இருக்கிறது என்று தெரிகிறது. அதனால் எது நம்புவது, எது நம்பாமல் போவது எங்களுக்கு எந்த அளவுக்கும் அர்த்தம் ஆகவில்லை. இவற்றை எல்லாம் கவனித்த பின் எல்லோருக்கும் எல்லாம் வேறாக உங்கள் போதனை இருப்பதினால் எல்லா மதங்களுக்கு சமமான தூரத்தில் உங்கள் ஞானம் இருப்பதினால், கடவுள் சொல்லிய தர்மசாஸ்திரம் நீங்கள் சமர்ப்பிக்கின்றதால் தூய்மையான ஞானம், தூய்மையான உபாயம் உங்களிடம் கிடைக்கும் என்று நினைக்கிறோம். அதனால் நீங்கள் சொல்லிய ஞானம் நம்புகிறோம் என்னும், எங்களுக்கு மாயை ஜெயிப்பதற்கு உபாயம் சொல்லுங்கள் என்று வேண்டிக் கொள்கிறோம்?

**பதில்:-**நான் உனக்கு சொல்லிய ஞானம் எனக்கு என் ஆத்மா இலவசமாய் தெரிவிக்கிறது. அதனால் நான் உனக்கு இலவசமாக தெரிவிக்கிறேன். இலவசம் ஆனது என்னும் இந்த போதனை குறைவானது என்று பார்க்காதே. மிக

முக்கியமானது என்று தெரிந்துக் கொள். மாயை என்பது குணங்களின் விளைவுகள் என்று அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். இதற்கு சாட்சியமாக பகவத்கீதையில் **“குணமாயி மமமாய”** என்று சொல்லினார்கள். அதனால் மாய என்னும் வாக்கியம் கேட்டால் மனிதன் தேகத்தில் உள்ள குணங்கள் நியாபகம் வருகிறது. குணங்களை ஜெயித்தால் மாயை ஜெயிப்பதாகும். அவற்றை ஜெயிக்கணும் என்றால் அவற்றுக்கு சம்மந்தப்பட்ட விஷயம் எல்லாம் சம்பூர்ணமாக தெரிந்துயிருக்க வேண்டும். குணங்கள் பற்றி அவை 108 பாகமாய் பிரிந்துள்ளது என்னும், அதில் ஒரு குணங்கள் மனிதன் புத்தி தொட்டால் அது 12 மடங்காய் பெருக்கி உள்ளது என்று சொல்லினோம். மனிதனில் எல்லா ரகமாய் ஆட்டுவதில் முக்கியமான பாத்திரமாய் நடத்துகிறது என்று கூட சொல்கிறோம். அப்படிப்பட்ட பலமான குணங்களை அல்லது பலமான மாயை ஜெயிப்பதற்கு மூன்று தெய்வ கிரந்தங்களில் ஒரு விதானம் தெரிவிக்கிறது. மூன்று கிரந்தங்களில் சொல்லிய தர்மசாஸ்திரம் தெரிந்து கொள்ளுவதால் மாயையை சுலபமாக ஜெயிக்கலாம். மாயை தயார் செய்தவர் கடவுள் தான். மேலும் மாயை ஜெயிப்பது உபாயம் கடவுளே சொல்ல வேண்டும். அதனால் கடவுள் சொல்லியது சரியான உபாயம் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். கடவுள் முன்பு மனிதனுக்கு குணங்கள் மாயை வழங்கப்பட்டு அதன் பிறகு மாயைக்கு மருந்து போல ஞானத்தை மனிதனுக்கு தெரிவித்தார். இதற்கு முன் குணங்கள் என்பதற்கு பெருக்கி என்று அர்த்தம் சொல்லினோம். குணங்கள் ஏதாவது அதன் சுபாவம் பிரகாரம்

இல்லாததை கொண்டுவந்து சிறியதை, பெரியதாக செய்கிறது. குணங்களில் சேர்ந்த எந்த விஷயமாக இருந்தாலும் அது வளர்வதற்கே ஆரம்பிக்கும் குறையாது. மனிதன் தலையில் 12 குணங்கள் 12 ரகமாய் இடத்திலேயே கலந்து இருக்கிறது. அந்த 12 ரகமாய் இடத்திலேயே மனிதன் வாழ்க்கை அமர்ந்து இருக்கிறது. இந்த விதமாக குணங்கள் என்றால் பெருக்கியதாக தெரிகிறது. மாயைக்கு பகையாக இருப்பது தர்மம். மாயை விசாலமாய் பரவி இருப்பதினால் தர்மம் என்பது இருக்கிறதை இல்லாமல் செய்கிறது. தம் என்னும் சத்தத்தில் இருந்து தர்மம் என்னும் சத்தம் பிறந்தது. தம் என்றால் நாசனம் **(அழிவு)** என்று அர்த்தம். தர்மம் என்றால் எல்லாத்துக்கு காரணமான கர்மம் இல்லாமல் செய்கிறது என்று அர்த்தம். குணங்கள் இருந்தால் அதற்கு அனுபந்தமாய் கர்மம் இருக்கிறது. குணங்கள் இல்லாமல் போனால் கர்மம் கூட இல்லை என்று அர்த்தம். எந்த குணங்களை மாயையாக சொல்லப்படுகிறதோ, அந்த குணங்களை குறைவாக செய்வது தர்மம். பகவத்கீதா விஸ்வரூபசந்தர்சனயோகமில் 32 ஆவது சுலோகத்தில் கடவுளான பகவான் தன்னைப் பற்றி சொல்லினார். **“கலோஷ்மி லோகக்ஷயா”** உலகத்தை அழிப்பவன் என்று அர்த்தம். கடவுள் அழிப்பவன் என்று சொல்லினார். அப்படிப்பட்ட கடவுள் சம்மந்தப்பட்ட தர்மங்கள் நாசனம் செய்கின்றதாக உள்ளன. அதனால் தர்மம் என்றால் நாசனம் என்று அர்த்தம் காணலாம். இன்னும் விவரமாய் சொல்லினால் உலகம் என்றால் குணங்கள் பாகம் என்று அர்த்தம். மூன்று லோகம் என்றால் மூன்று குணங்கள் பாகம் என்று அர்த்தம். தாமச, ராஜச, சாத்விக, குணங்கள் பாகமில்

ஆன்மீக கல்வியில் மூன்று லோகம் என்று சொல்லப்படுகிறது. மூன்று குணங்கள் பாகமில் **108** குணங்கள் பாகங்களை நாசனம் செய்யும் விதானம் தர்மம் என்று சொல்கிறோம். இருக்கிறதை இல்லாமல் செய்வது முக்கியமாக பொறுப்பாக வைத்துக்கொண்டு கடவுள் விதானம் தர்மம் என்று சொல்கிறோம். மனிதன் தன் கர்மத்தை, குணங்கள் இல்லாமல் செய்யும் விதானம் கடவுள் தர்மம் என்று சொல்கிறோம். தர்மசாஸ்திரம் என்றால் உன்னை, என்னை, அனைத்தும் இல்லாமல் செய்வது சாசனத்தில் கூடி உள்ளது தர்மசாஸ்திரம். மாயை என்றால் கர்மத்தை வளர்த்தி, ஜெகத்தில் உற்பத்தி செய்கின்றதாக உள்ளது. அதற்கு எதிராக ஏற்பட்டது தர்மசாஸ்திரம். தர்ம சாஸ்திரத்தில் உன்னை நீ இல்லாமல் செய்கின்ற விதானம் இருக்கிறது. இந்த வார்த்தை கேட்கும்போது உங்களுக்கு சிறுது ஆச்சர்யமாய் இருக்கும். எதற்காக என்றால் மாயை ஜெயிப்பதற்கு இந்த ஞானமோ, யோகமோ, பக்தி மார்கமோ, ஆராதனை வரிசையாக, நடைமுறை விதானமோ போதிப்பார் என்று நினைத்தால் நாசனம் பற்றி சொல்கின்றார் என்று நினைத்துக் கொள்வீர்கள். கடவுள் விதானத்தில் நீங்கள் நினைத்துக் கொண்ட பக்தி, ஆராதனை, நடைமுறை இல்லை. கடவுள் விதானம் எல்லாம் தர்மமாய் உள்ளது. குணங்கள் பெருக்கி, அதற்கு எதிராக குறைப்பது தர்மத்தின் வேலை விதி விதானமாய் உள்ளது. ஆயுதம் என்றால் மனிதன் அவன் ஆயுளை நாசம் செய்வது என்று அர்த்தம். இந்த வாக்கியத்தில் ஆயு என்றால் ஆயுஷ்சு என்னும், **தம்** என்றால் நாசனம் என்று அர்த்தம். ஆயுஷ்சு இல்லாமல்

செய்யும் கத்தியை ஆயுதம் என்று சொல்கிறோம். மனிதனை குத்திக் கொன்ற கத்தியை ஆயுஷ்சு இல்லாமல் செய்தது அதனால் ஆயுதம் என்னும் சத்ததை உபயோகித்து சொல்லினார். இதில் **"தம்"** என்னும் வாக்கியம் நாசனம் என்று தெரிகிறது. **"தம்"** என்ற சத்தத்தில் பிறந்தது தர்மம். கடவுள் விதானம் எல்லாம் இல்லாமல் செய்வது ஆனதினால், கடவுள் தர்மங்களில் குடியிருக்கிறவர் என்று சொல்கின்றார்கள். அப்படிப்பட்ட கடவுள் தெரிவதற்கு தர்மம் தெரிய வேண்டும். தர்மங்கள் பற்றி தெரிந்தால் நாசனம் செய்யும் கடவுள் எப்படியிருப்பார் என்று தெரியும். அதனால் கடவுள் தெரிவதற்கு தர்மங்கள் சாஸ்திரம் பிரகாரம் தெரிந்துக்கொள்ள வேண்டும். அப்படி கடவுள் சாசனங்களால் கூடி உள்ளது தர்மசாஸ்திரம். உலகத்தில் உற்பத்தி செய்து, ஜென்மங்களை உண்டாக்கி மனிதனை வளர்த்தி பெரிய உலகமாய் மாயை செய்கிறது. அப்படிப்பட்ட உலகத்தில் நாம் எல்லாம் உள்ளோம். நமக்கு ஜென்மங்கள் இல்லாமல் போய் ஜென்மம் கருவுறாமை இல்லாமல் போய், ஜெகத்தில் இல்லாமல் போவதற்கு கடவுள் தர்மங்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும். கடவுளின் தர்மம் என்பது தர்மசாஸ்திரம். கடவுளுக்கு சம்மந்தப்பட்ட பகவத்கீதை, பைபிள், குரான் கிரந்தத்தில் தர்மசாஸ்திரத்தில் முழுமையாக நிறைந்துள்ளது. அதனால் அந்த மூன்று கிரந்தங்களை தெய்வ கிரந்தங்கள் என்று சொல்கிறோம். அந்த மூன்று கிரந்தங்களில் கர்மத்தை இல்லாமல் செய்யும் விதானம் உள்ளது. அனைத்திற்கும் காரணமான கர்மம் இல்லாமல் போனால் கர்மத்தினால் உள்ள குணங்கள் கூட இல்லாமல் போகும்.

குணங்கள் இல்லாமல் போனால் குணங்கள் விளைவுகளில் கூடிவுள்ள மாயை கூட இல்லாமல் போகும். மாயை இல்லாமல் போனால் கடவுள் மட்டும் இருப்பார். மாயை இல்லாத சமயத்தில் மனிதன் தேகத்தில் உள்ளே இருந்த கடவுள் மனிதனுக்கு தெரிவார். அப்படிப்பட்ட அவன் ஜெகத்தில் இல்லாமல் போய் பரமாத்மாவில் சேர்ந்து விட்டு என்றால், மோக்ஷம் பெறுவார். தர்மசாஸ்திரம் என்றால் எல்லோரும் நினைத்தது போல் இல்லை. விஸ்வம் உள்ள வரை எல்லோருக்கும் கடவுள் தர்மங்கள் தெரிவதற்கு தர்மம் கிரந்த உருவத்தில் உள்ளது. தர்மசாஸ்திரம் மூன்று கிரந்தங்கள் உருவத்தில் உள்ளது. அதனால் மூன்று கிரந்தங்களில் தர்மசாஸ்திரத்திற்கு சம்மந்தப்பட்ட கிரந்தங்கள் என்று சொல்லலாம். சாஸ்திரம் என்றால் சாசனத்தில் கூடியிருக்கிறது என்று அர்த்தம். இங்கு சாஸ்திரம் வேறு, கிரந்தங்கள் வேறாக சொல்லுவது ஆகும். தேகத்தின் உள்ளே உள்ள கிரந்தினி ஊக்கப்படுத்தியது கிரந்தம். தேகத்தில் உள்ளே உள்ள தெய்வத்தை தெரியப்படுத்தியது தர்மசாஸ்திரம். தேகத்தில் கண்ணீரை கிரந்தினியை பற்றி தெரிவித்த விஷயத்தில் உள்ள புத்தகங்களை கிரந்தம் என்று சொல்லலாம். அப்படிப்பட்ட கிரந்தம் படிக்கும்போது ஆனந்த கண்ணீர் கண்ணில் இருந்து வரும். தர்மசாஸ்திரத்தில் உள்ளது ஏதாவது கிரந்தமே ஆகும். அந்த கிரந்தம் மனிதனில் புதிய பொலிவு நிறைத்து தெய்வம் தெரிவிப்பதற்கு உதவி செய்யும். நாங்கள் எழுதிய விஷயங்கள் தர்மங்களுக்கு சம்மந்தப்பட்டதினால் நாங்கள் எழுதியது எல்லாம் கிரந்தமே ஆனதாகும். இந்த சிறிய

எழுத்தில் முக்கியமான தர்மங்கள் இருப்பதினால் இது கிரந்தமே தான், தர்மசாஸ்திரம் தான்.

**...சமாப்தம்...**

**ஒரு விஷயம் ஒப்புக் கொள்வதற்கு**
**சாஸ்திரம் எவ்வளவு தேவையோ,**
**அப்படியே ஒரு விஷயம் கண்டிப்பதற்கு**
**சாஸ்திரம் அவ்வளவு தேவை.**

**அசத்தியம் ஆயிரம்பேர் சொல்லினால்**
**அது சத்தியம் ஆகாது,**
**சத்தியத்தை ஆயிரம் பேர் அல்ல என்று சொல்லினால்**
**அது அசத்தியம் ஆகாது.**